
SKY WINGS LTD
TRAVEL AGENTS
WORLWIDE
24 hour
Ticketing
ROYAL JORDANIAN
119 Tooting High Street
London SW17 0SY
Tel: 020 8672 9111

VADALEE



# வடலி

FREE - COMMUNITY PAPER சமூகப் பத்திரிகை May 2008 வடலி 8 ஓலை 84

எது?
எப்பொழுது?
எங்கே?
விரைவில்
www.udukku.com
உடுக்கு டொட் கொம்

# எல்லை, குடிவரவு, வீசா–பரிசோதனை, சுங்கம் ஆகியவை ஒன்றிணைக்கப்படுகின்றன

பிரித்தானியாவின் எல்லை முகவர் அமைப்பு மேலும் அதிகாரங்களைப் பெறுகிறது. குடிவரவு, விசா பரிசோதனை, சுங்கம் ஆகிய மூன்று அமைப்புக்களும் இதனுடன் இணைந்து பணியாற்ற உள்ளன. இதன்மூலம் 25,000 பேர் அடங்கிய பாரிய அமைப்பாக இது மாறுகிது. இறங்கு துறைகள் எல்லை நிலைகள் என்று 135 நாடுகளில் அலுவலர்கள் கடமையில் ஈடுபட உள்ளனர். அதற்கேற்ப இதுவரை இந்த நான்கு துறைகளுக்கும் முன்பு இருந்திராத புதிய அதிகாரங்களும் வழங்கப்பட உள்ளன.

2007ம் ஆண்டு கார்த்திகையில் உள்நாட்டு அலுவலகத்தின் ஒரு நிழல் அமைப்பாக ஏற்படுத்தப்பட்ட இந்த அமைப்பு இன்று இந்த நிலைக்கு வளர்ந்துள்ளது. இதனால் இவர்களின் பொறுப்புக்களும் வளர்ந்துள்ளன. கடந்த ஆண்டு 4200 வெளிநாட்டு கைதிகள் திருப்பி அனுப்பப்பட்டனர். இந்த ஆண்டு குறைந்தது 5,000 பேரையாவது திருப்பி அனுப்பவேண்டும் என எதிர்பார்க்கின்றது. 2009 சித்திரைக்கு முன் போதைப் பொருள்கள் கண்டு பிடிப்பை சென்ற ஆண்டளவுக்கு உயர்த்த வேண்டும் என்றும், தஞ்சம் கோரல் விண்ணப்பங்களுக்கு முடிவெடுக்கும் எண்ணிக்கையைக் குறைந்தது 50 சத வீதத்தாலவது அதிகரிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருப்பி அனுப்புவோர் தொகையைக் கூட்டுவதற்காகு குறைந்தது 20 வீதத்தாலாவது தடுத்து வைக்கும் சிறைகளைக் கூட்ட வேண்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் இந்தப் பணியை எளிதாக்கும் நோக்கில் அடுத்த நான்கு மாதங்களுள் ஆயிரம் பேர்வரை குடிவரவு சுங்கம் ஆகியவற்றைக் கையாளும் அதிகாரம் பெறுவார்கள். அவர்களில் இங்கிலாந்திலும் வேல்சிலும் கடமையில் ஈடுபடுபவர்கள் காவல் துறையினரை ஒத்த அதிகாரங்களையும் பெற உள்ளார்கள். அவர்கள் வாகனங்கள், தொடர் ஊர்திகள் வானூர்திகள் ஆகிவற்றில் ஏறிப் சோதனை செய்யலாம், கட்டிடங்களுள் புகுந்து பொருட்களை கைப்பற்றலாம். காவல் துறையுடன் இணைந்து பணியாற்றும் ஒழுங்குகளும் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன. அவர்களுக்கு ஆயிரம் மில்லியன் பவுண் செலவில் “ஸ்கானிங்” வசதிகளும் எற்படுத்தப்படுகிறது.

## கட்டாய திருமணத்தை தடுக்க புதிய சட்டம்

வலுக்கட்டாயமாக திருமணத்தினுள் திணிக்கப்படுபவர்களுக்கு உதவும் பொருட்டு ஒரு ஆதரவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

“ஒணர் நெற்வேர்க்” என்று அழைக்கப்படும் இக்குழு, “கர்ம நிர்வன” என்னும் அறக்கட்டளையால் நடத்தப்பட்டு வருகிறது. வலுக்கட்டாய விவாகத்தினுள் உட்படுத்தப் படுகிறவர்களுக்கும், குடும்பமானத்திற்கு பங்கம் ஏற்பட காரணமாக இருந்தார் என வன்முறைக்கு ஆளாகின வர்களுக்கும் இக்குழு உதவுகிறது.

தங்களுக்கு உதவி தேவை என எண்ணுகிறவர்கள் யாரும் இவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.
ஒருவர், தான் வலுக்கட்டாயமாக விவாகம் செய்ய வெளிநாட்டிற்கு அழைத்துசெல்லப்பட இருக்கிறார் என உணர்ந்தால் வலுக்கட்டாய திருமண பிரிவை 020 7008 0151 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

வலுக்கட்டாய திருமணப் பிரிவானது, வெளிநாடு, பொது நலவாய அலுவலகம் மற்றும் உள்நாட்டமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து இயங்கும் ஒரு அமைப்பாகும்.
இவ்வமைப்பிற்கு ஏற்கனவே 5 ஆயிரத்திற்கும் அதிகமான விசாரணைகள் வந்திருக்கின்றன என்றும் 400 வலுக்கட்டாய திருமணச் சம்பவங்கள் புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஒருவருக்கு அவரது விருப்பத்திற்கு மாறாக திருமணம் நிச்சயிக்கப் பட்டால் அதை தடுத்து நிறுத்தும் சட்டமும் இவ்வருட இறுதியில் கொண்டு வரப்பட உள்ளது. இதன் கீழ் திருமணம் நடந்தாற்கூட பாதிக்கப்பட்டவரை அச் சூழலிலிருந்து பாதுகாப்பாக வெளியே எடுக்கும் ஆணை பிறப்பிக்கவும் நீதிமன்றத்தால் முடியும்.

உங்கள் அபிமான வடலியை இப்பொழுது
இணையத்திலும் பார்வையிடலாம்
www.vadalee.com

## சட்டவிரோத குடிவரவாளர்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது: குடிவரவு அமைச்சர்

சட்டவிரோத குடிவரவாளர்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் மீது அதிகரித்தளவு எண்ணிக்கையில் வழக்குதொடரப்பட்டு வருவதாக பிபிசி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த மாசி மாத இறுதியில் சட்டமாற்றம் நிகழ்வின் பின் 137 வியாபார நிலையங்கள் சட்ட விரோத குடிவரவாளர்களை வேலைக்கு அமர்த்தினார்கள் என்ற வழக்குதொடரப்பட்டுள்ளது. இது 2007-ம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் 10 மடங்கு அதிகமாகும்.
சட்டவிரோத குடிவரவாளர்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் மீது 10,000 பவுண்கள் வரை அபராதம் விதிக்கப்படுகிறது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 500,000 பவுண்கள் அபராதப்பணமாக பெறப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் சட்டவிரோத குடிவரவாளர்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் சிறைத் தண்டனையும் பெறுவார்கள் என கூறப்பட்டுள்ளது.

வியாபார போட்டி காரணமாக சில தந்திர வியாபார ஸ்தாபனத்தினர் இவ்வாறு சட்டவிரோத குடிவரவாளர்களை வேலைக்கு அமர்த்தி பிரித்தானிய சம்பள அளவை கீழிறக்கிறார்கள் என்றும் இதற்காகவே தாம் அதிரடி நடவடிக்கையை கொண்டு வந்துள்ளதாக குடிவரவு மந்திரி லியம் பிறைன் தெரிவித்துள்ளார்.

Nerojan Silks



ராசியான முகூர்த்த புடவைகளுக்கு சிறந்த இடம்....
நீண்டகால அனுபவம் மிக்க திருமணக் கூறைப் புடவைகள் விற்பனையாளர்
www.nerojansilks.com
திருமணம், பூப்பு நீராட்டுவிழா போன்றவற்றிற்கான Hair Style உங்களுக்கு தேவையான முறையில் செய்து கொள்ளலாம்
273-275 Ilford Lane, Ilford,
Essex IG1 2SD
Tel: 020 8553 5000
Mob: 07950 717 694

Travel RIGHT
The RIGHT people to do business
82 MITCHAM ROAD, TOOTING, SW17 9NG
ATOL 5766
Worldwide Travel Agent
IATA
Main Agents for
020 8767 7775
Mobile : 07850 876 921
E-mail : bala@skybooker.com

தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS
JEWELLERS
276 High Street North, Eastham, London E12 6SA
Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448



தரமான தங்கநகைகளை மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
லக்சுமிஸ் ஜுவலர்ஸ்
தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்

Credit Card (கடன் அட்டை) Secured Loan வீட்டின் மேல் கடன் பெற்றிருந்தாலும், Car Finance கடன் மூலம் கார் வாங்கியிருந்தாலும், கடன்தொகையில் இருந்து முற்றாக விடுபட்டு நிம்மதியாக வாழ விரும்பினால் உதவத் தயாராக இருக்கிறோம். பெற்ற கடனை திரும்பி செலுத்த வேண்டியது இல்லை. அலோசனைக்கு
தொடர்புகளுக்கு Mob: 07930 626 585 Tel: 020 8640 3355

For News /Articles/ Adverts:
020 8694 7412
PO Box 24783 London SE13 7YE
E-mail: vadalee@lycos.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியச் செய்திகள்

- சி.மாசிலாமணி

## செலவைக் குறைக்க இந்தியாவில் அலுவலகம்

பிரித்தானியாவின் கப்பிட்டல் வன் (Capital One) என்னும் வங்கி தனது செலவைக் குறைக்கும் நோக்கத்திற்காக இந்தியாவில் அலுவலகம் திறக்க முடிவு செய்துள்ளது. இதன் விளைவாய் இங்கு 750 பேர் இங்கு வேலையை இழக்க உள்ளனர்.

இது சம்பந்தமாக வங்கியின் தலைவர் சிறினி கோபாலன் தனது பணியாளர்களுக்கு எழுதிய கடிதத்தில் இந்த முடிவினால் நிர்வாகச் செலவு குறைவதுடன் போட்டிகளும் எளிதில் சமாளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## இலண்டனில் இராமயண ஓவியக் கண்காட்சி

இம் மாதம் 16 திகதி இலண்டன் பிரித்தானிய நூலகத்தில் இராமயண ஓவியக் கண்காட்சி ஆரம்பமாகிறது. செப்டம்பர் 14 வரை இக் கண்காட்சி தொடரும்.
இராம காவியத்தை விளக்கும் அரிய வகையான 120 ஓவியங்கள் அடங்கிய இக் கண்காட்சி ராஜஸ்தான் அரண்மனை ஒன்றில் 350 ஆண்டுகளுக்கு முன்பு காட்சிக்கு இருந்தவை. இப்போ முதல் முறையாக பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படப் போகின்றன.

## சமயப் பணியில் ரொனி பிளேர்

ஆரசியலில் இருந்து விலகிய பின் கத்தோலிக்க சமயத்திற்கு மாறிய முன்னைய பிரதமர் ரொனி பிளேயர், தன் வாழ்வின் எஞ்சிய நாட்களை சமயப் பணிக்காக அர்ப்பணிக்கப் போவதாக அறிவித்துள்ளார். சர்வ தேச அளவில் இதைச் செய்ய உள்ளார். அதற்காக சர்வ தேச அமைப்பு ஒன்றையும் நிறுவ உள்ளார்.

## குற்றவியலாளர்களிடம் பறித்த பணம் குற்றவியல் தடுப்பிற்கே பயன்படுகிறது

சட்ட விதிகளை மீறி சம்பாதிக்கப்படும் பணம் பறிமுதல் செய்யப்பட்டு குற்றவியல் தடுப்பிற்கே பயன்படுத்தப்படுகிறது.
சென்ற ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் மட்டும் 34 மில்லியன் பவுண்கள் இந்த வகையில் பறிமுதலானது. அதில் 17 மில்லியன், இப்படியான குற்றச் செயற் தடுப்பிற்காகவே செலவிடப்பட உள்ளது. இப்படி குற்றவியல் முறையில் பெறப்படும் பணத்தை பறிமுதல் செய்வது குற்றவியலாளருக்கு முறையான செய்தி அனுப்பும் சாதனமாகச் செயற்படுகிறது.

## போலி – யப்பானிய போர் வாள்களும் தடைக்குள்ளாகின்றன

“சாமுராய்” என்ற அழைக்கப்படும் போலி யப்பானிய வாள்களுக்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது.

இப் போலி யப்பானிய வாள்கள் பல வன்செயல்களுக்கு பயனபட்ட காரணத்தால் அவையும் தற்போது தடைக்கு உள்ளா கின்றன. குற்றச் செயல் கட்டுப்பாட்டின் ஒரு அங்கமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டாலும், உண்மையில் சரித்திர தேவை போன்றவற்றிக்காத் தேவைப்படுவோருக்கு வைத்திருக்கும் அனுமதி வழங்கப்படும்.

## இலங்கையில் சிக்குன்குன்யா, டெங்கு, எலிக்காய்ச்சல் 20 ஆயிரம் பேர் இதுவரை பாதிப்பு

சிக்குன்குன்யா, டெங்கு, எலிக்காய்ச்சல் மற்றும் அடையாளம் காணப்படாத வைரஸ் காய்ச்சல் ஆகியன இலங்கையை பெரும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளதாக சிறீலங்கா சுகாதாரத் துறையினர் தெரிவித்ததுடன் 20 ஆயிரம் பேர் இவற்றின் தாக்கத்திற்குட் பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.
தென்னிலங்கையைப் பீதியில் ஆழ்த்தியுள்ள இக்காய்ச்சலினைக் கட்டுப்படுத்த அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.
கடந்த சில மாதங்களில் மாத்திரம் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு 8 பேர் பலியாகியுள்ளதுடன், 2 ஆயிரத்து 359 பேர் இதன் தாக்கத்திற்கு உட்பட்டும் உள்ளனர்.
எலிக் காய்ச்சலினால் 40 பேர் பலியாகி யுள்ளதுடன், ஆயிரக் கணக்கானவர்கள் இதன் தாக்கத்திற்கும் உட்பட்டு தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இவ்வாறே சிக்குன் குன்யா மற்றும் அடையாளம் காணப்படாத வைரஸ் காய்ச்சல் என்பனவற்றினாலும் சிலர் பலியாகி யுள்ளதுடன், பல ஆயிரக் கணக்கானவர்கள் இதன் தாக்கத்திற்குட்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

## உள்ளூர் அரிசி வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

இலங்கையில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலைகள் (உச்ச விலைகள்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.
சித்திரை 17ம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய விலைகள் தொடர்பாக விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

புதிதாக நிர்ணயிக்கப்பட்ட அதி உச்ச விலைகளின் விவரங்கள் வருமாறு:
ஒருகிலோ சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 70 ரூபா ஆகும். நாட்ட ரிசிக்கு 65 ரூபாவும், சிவப்பு அரிசிக்கு 65 ரூபாவும் வெள்ளை அரிசிக்கு 55 ரூபாவும் கட்டுப்பாட்டு விலைகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.
மொத்த விற்பனை விலை மட்டங்களாக ஒருகிலோ சம்பா ரூபா 63, நாட்டரிசி ரூபா 58, சிவப்பு அரிசி ரூபா 58, வெள்ளை அரிசி ரூபா 48 ஆகவும் இருக்கும்.
நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசியை விற்பனை செய்யாத வர்த்தகர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக வாணிப அமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரித்துள்ளார்.

வடலியில் வெளிவரும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். வடலி எந்த வகையிலும் பெறுப்பேற்காது. வாசகர்கள் அனுப்பும் ஆக்கங்களை திருத்தியமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

## அண்மையில் பெய்த மழையை அடுத்து தென்மராட்சியில் வைரஸ் காய்ச்சல் தீவிரம்

அண்மையில் பெய்த மழையினையடுத்து தென்மராட்சி பிரதேசத்தில் வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
தினமும் 200 மேற்பட்டடோர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில் பிரதேச மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிகளில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.
விடுதி தரைகளில் கூட இட நெருக்கடி நிலவுவதாகவும் இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மாமனிதர் சிவராமின் 3 ஆம் ஆண்டு நினைவு நாள்

பிரபல ஊடகவியலாளர் “மாமனிதர்” தராக்கி என்று அழைக்கப்படும் தர்மரட்ணம் சிவராமின் மூன்றாவது ஆண்டு நினைவு சென்ற சித்திரை மாதம் 28-ம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியத்தின் நியாயப்பாட்டை சிங்கள தேசத்திற்கும் உலகிற்கும் தனது எழுத்துக்களால் எடுத்துரைப்பதில் முக்கிய பங்காற்றிய சிவராம், 2005 ஆம் ஆண்டு சித்திரை 28ம் திகதி சிறிலங்காவின் தலைநகர் கொழும்பு பம்பலப்பிட்டியில் கடத்தப்பட்டார். மறுநாள் காலை அவரது உடலம் நாடாளு மன்ற வளாகச் சூழலிற்கு அண்மையில் மீட்கப்பட்டது.
தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் புலமை களுடன் கட்டுரைகளைப் படைக்கும் வல்லமை பெற்றிருந்த சிவராம், தமிழ்நெட் இணையத் தளத்தின் ஆசிரியராக விளங்கியதுடன் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளில் கட்டுரைகளையும் எழுதி வந்தார்.
இவரது கட்டுரைகள் பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாக வெளி வந்ததுடன் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் இவரது எழுத்துப் பாணி அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

## ஆங்கிலம் அழிந்து உருமாறுமா?

இன்று ஆங்கிலம் அகில உலக மொழியாகி விட்டது, அதற்குப் பெருமை சேர்த்திருப்பது மறுப்பதற்கில்லை. ஆனால் வெவ்வேறு நாட்டவர்கள் தாம் ஆங்கிலத்தில் உரையாடும் போது, தத்தம் தாய்மொழிச் சொற்களையும் கலந்து உரையாடுவது, நம் காதில் தினமும் விழவே செய்கின்றது. இன்னும் 100 வருட காலத்தில், இன்றைய ஆங்கிலம் உருமாறி, “யபெடளைா என்றாகி விடும் என்று ஆருடம் சொல்கின்றார்கள் ஆய்வாளர்கள். ஆங்கிலத்தை தமது இரண்டாவது மொழியாகக் கற்பவர்கள், புதிய சொற்களை இந்த மொழியில் புகுத்தி பெரிய மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றார்கள் என்கிறார் டாக்டர் எட்வின் டன்கன். இவர் அமெரிக்க பல்கலைக் கழகமொன்றின் ஆங்கில மொழி ஆய்வாளர். 2020ம் ஆண்டளவில் 2 பில்லியன் வரையிலான வர்கள் ஆங்கிலத்தில் உரையாடுவார்கள் என்று கருதப்படும் அதே வேளை, இந்த இராட்சத தொகையில் 300 மில்லியன் தொகையினர் மாத்திரமே, ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பார்கள் என்றும் கணக்கிடுகின்றார்கள்.


## சர்வதேச தமிழ்ச் செய்தியாளர் ஒன்றியத்தின் மாநாடு

சர்வதேச தமிழ்ச் செய்தியாளர் ஒன்றியத்தின் வருடாந்த மாநாடு கடந்த சித்திரை மாதம் 26ம் திகதி சனிக்கிழமை வெஸ்ட்மின்ஸ்ரர் பல்கலைக்கழகத்தின் கரோ வளாகத்தில் நடைபெற்றது.
இம் மாநாட்டில் சர்வதேச நாடுகளைச்சேர்ந்த பல ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். இலங்கையில் இருந்து உதயன் சுடரொளி ஆசிரியர் திரு வித்தியாதரன், அவுஸ்ரேலியா இன்பத்தமிழ் வானொலி ஊடகவியலாளர் திரு. பிரபாகரன், கனடா ஊடகவியலாளர் திரு.திருசெல்வம், எழுத்தாளர் சேரன், இந்திய ஊடகவியலாளர்கள் பகவான் சிங், முராரி இலண்டன் தமிழ் கார்டியன் சுதா, இலண்டன் பிபிசி செய்தியாளர் பண்டார ஆகியோருடன் பெல்யியம் சர்வதேச செய்தியாளர் சம்மேளன பிரதிநிதி றேச்சல் கோகென் மீடியா வைஸ் ரிறஸ்ட், திரு. மைக் ஜெம்ப்சன் கிறிமினலைசிங் கொம்மியுனிட்ரீஸ், திரு. ஜஸ்ரின் றன்டல் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புக்களில் ஆய்வுகளை முன்வைத்தனர்.
“ஊடகமும் இலங்கைப்பிரச்சனையும்-உண்மை எங்கே? என்ற தலைப்பில் இடம்பெற்ற இம்மாநாட்டில் 200க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் எழுத்தாளர்கள் ஆவலர்கள் கலந்துகொண்டனர். இம் மாநாட்டில் பேசிய அவைரும் இலங்கையில் ஊடகத்துறை மிக மோசமான அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதை வன்மையாக கண்டித்தனர். ஊடகமட்டத்தில் மனித உரிமைமீறல்களில் இலங்கை முன்னனி வகிப்பதை பலரும் சுட்டிக்காட்டினர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை நூற்றாண்டுக்கு முன் குடாநாட்டில்!.. - 14

- தி.ச.வரதர்

# அக்காலத்து கிராமியக் கடைகள் எப்படியிருந்தன?

**1920ம் ஆண்டில் இருந்து 1960ம் ஆண்டு வரையிலான 40 ஆண்டு காலத்தில் தமிழ்பிரதேசங்களில் குறிப்பாக யாழ்குடாவில் சமூக ஈடுபாடு, சமூக கட்டமைப்பு, வாழ்க்கை முறை, வாழ்வாதாரங்கள், போன்றவை எப்படி இருந்தன என்று இப்போது இருக்கும் பலருக்கு தெரியாது.**

**பொதுவாக அறுபது 70களில் இருந்த வாழ்க்கை முறையே தான் அதற்குமுன்பும் இருந்திருக்கும் என்று அவர்கள் என்னுவார்கள். இது இயல்பே. ஆயினும் நிலமைகள் உண்மையில் எப்படி இருந்தன என்பதை ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு.தி.ச.வரதராசன் அவர்களின் நினைவில் மலர்ந்த சில சம்பவங்களின் ஊடாக வாசகர்கள் முன்கொண்டுவருகிறோம்**

## அப்பாவின் கடை

பெரிய 'பக்கீஸ்' பெட்டியில் சீயக்காய் இருக்கும். சீயக்காய் அப்போது முக்கியமான பொருள். ஒவ்வொரு சனிக்கிழமையும் எல்லோரும் எண்ணெய் தேய்த்து முழுகுவார்கள். சிலர் கிழமைக்கு இரண்டு முறை முழுகுவார்கள். எண்ணெயைப் போக்குவதற்கு சீயக்காய் தேவையாக இருந்தது. அதற்கு முன்னால் 'அரப்பு'த்தான் உபயோகிக்கும் வழக்கமிருந்தது. அரப்பு என்பது இலுப்பைப் பிண்ணாக்கு. அரப்பை இடித்து, நீரில் போட்டு, அதனுடன் ஒரு எலுமிச்சம் பழத்தையும் போட்டு அவிப்பார்கள். முதலில் எலுமிச்சம் பழத்தை நன்றாகத் தலையில் தேய்த்துவிட்டு பிறகு அரப்பைத் தேய்ப்பார்கள். எப்படித்தான் கண்களை மூடிக்கொண்டிருந்தாலும் அரப்புத் தூள் கண்ணுக்குள் புகுந்து நெடு நேரம் வரை கண்ணை உறுத்திக் கொண்டிருக்கும். அரப்பு தலைமயிரை முரடாக்கி விடும் என்பது போன்ற எண்ணத்தினால் பிறகு அநேகமானோர் சீயக்காயையே உபயோகித்தார்கள். பிறகு சீயக்காய் தூளாகவே பக்கெட்டுகளில் வந்துவிட்டது. அதுவும் போய் இப்போது 'ஷம்பூ' தேவைப்படுகிறது.

எண்ணை முழுக்கென்றால் சும்மா ஒருகை எண்ணையைத் தலையில் வைத்து முழுகுவதல்ல. கோவணத்தைக் கட்டிக் கொண்டு உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரே எண்ணைக் குளியல்தான். எண்ணை வைத்துவிட்டால் உடனே போய் முழுக விடமாட்டார்கள். உடம்பில் 'எண்ணை ஊறுமட்டும்' மணித்தியாலக் கணக்கில் காத்திருந்துதான் முழுக்க வேண்டும்.

முழுக்குத் தினத்தில் சாப்பாடும் சிறப்பாக அமையும். ஊன் உண்பவர்களால் அன்றைய தினம் பல கோழிகளின் ஆயுள் முடியும். அன்றைக்குச் சில 'பத்தியங்களும்' காக்க வேண்டும். குளிரான பழங்கள் உண்ணக் கூடாது. வியர்வை வரும்படி வேலை செய்யக் கூடாது. ஆண்-பெண் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது. இப்படிச் சில பத்தியங்கள் உண்டு.

ஒழுங்காக எண்ணெய் வைத்து முழுகாவிட்டால் உடம்பில் சூடு சேர்த்து பலவித தொந்தரவுகளும் ஏற்படுமென்று சொல்வார்கள். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் 'தமிழ்வாணன்' அது தேவையற்ற ஒரு வேலையென்றும் அதனால் பெரிய பலன் ஏதுமில்லையென்றும் பல ஆதாரங்களுடன் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். அந்த கட்டுரையைப் படித்த பிறகு நான் எண்ணெய் முழுக்கை நிறுத்திவிட்டேன். (எனக்குப் பிடிக்காத ஒரு வேலையை நிறுத்துவதற்கு அந்தக் கட்டுரை ஒரு சாட்டாகவும் அமைந்தது!) எண்ணெய் முழுக்கினால் ஏற்படக் கூடிய நயநட்டகளைப் பற்றி என்னால் சரிவர எழுத முடியவில்லை. ஆனால் எண்ணெய் முழுக்கை நிறுத்தியதனால் என்னுடைய உடம்புக்கு எந்தவிதக் கெடுதியும் ஏற்படவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

அப்பாவின் கடையில் சீயக்காய்ப் பெட்டிக்குப் பக்கத்தில் தான் 'ஐஞ்சறைப் பெட்டி' இருந்தது. சுமார் நான்கு அடி நீளமும், இரண்டு அடி அகலமுமான ஒரு நீளப் பெட்டி. குறுக்கும் நெடுக்கும் பலகைகள் போட்டு சிறிதும், பெரிதுமான பல அறைகளாக வகுக்கப்பட்டிருந்தன. அவைகளுக்குள்தான் மல்லி, மிளகு, சீரகம், வெந்தயம், மஞ்சள் முதலிய பல சரக்குகள் இருந்தன. ஒரு பெரிய அறையில் செத்தல் மிளகாயும், இன்னொன்றில் 'ஈரவெண்காயம்' இருந்தன. 'ஈரவெண்காயமும்' என்று புதிதாக ஒன்றுமில்லை. சாதாரண வெண்காயம்தான். ஆனால் அதை 'ஈரவெண்காயம்' என்று சொல்லுவோம். அது ஏன் என்பது எனக்கு இன்னமும் தெரியவில்லை. சீரகத்தை 'நற்சீரகம்' என்போம். இன்னொரு சீரகம் இருந்தது. அதைப் 'பெருஞ்சீரகம்' என்போம். 'சோம்பு' என்றும் சொல்வதுண்டு. இறைச்சிக் கறி ஆக்குகிறவர்கள் தான் பெருஞ்சீரகம் வாங்குவார்கள். அந்தப் பெட்டியில் ஒரு சிறிய அறையில் பாக்கு இருந்தது. அதைத் 'கொட்டைப் பாக்கு' என்போம். பாக்கைச் சீவி சீவலாகவும் விற்பதால் இதைக் 'கொட்டைப் பாக்கு' என்று குறிப்பிட்டிருக்கலாம். பாக்குச் சீவலில் இரண்டு விதம் உண்டு. ஒன்று பாக்குவெட்டியால் கையினால் சீவி எடுப்பது. இந்தப் பாக்கு வெட்டியில்தான் எத்தனை விதம் இருந்தது. சில பாக்குவெட்டிகள் கலையுணர்வோடும் செய்யப்பட்டிருக்கும்.

கைச்சீவலை விட்டால் மற்றது 'மெஷின்' சீவல். சுமார் ஒன்றரை அடி நீளமான மரக்குற்றியில் பாக்குகளின் அடிப்பாகத்தைப் பொருத்தக் கூடியதாக சிறு குழிகள் இடைவெளி விட்டுச் செய்யப்பட்டிருக்கும். அந்தக் குழிகளுக்குள் சுமார் - 10-12 பாக்குகளை வரிசையாகப் பொருத்தி வைப்பார்கள். பிறகு மரம் சீவும் சீவுளியினால் மெல்லிதாக - கடதாசிக் தடிப்பில் சீவுவார்கள். மெலிதாக இருப்பதால் அவைசுருண்டு சுருண்டு விழும். பொன்னாலைக் கோயில் திருவிழாக் காலத்தில் ஒருவர் தினந்தோறும் 'இந்த-மெஷின்' பாக்குச் சீவல் செய்வதை நான் பார்த்திருக்கிறேன். திருவிழாக் காலத்தில், திருவிழா முடிந்ததும் வந்தவர்கள் எல்லாருக்கும் விபூதி, தீர்த்தம், சந்தனம் என்பவற்றோடு வெற்றிலை பாக்கும் கொடுப்பது வழக்கமாக இருந்தது. அதற்குப் பாக்கைக் கையால் சீவி மாளாது என்று மெஷினில் சீவி எடுப்பார்கள். மெஷின் சீவல் பொலிவாகவும் இருக்கும்.

அந்தக் காலத்தில் - சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சதம் கொடுத்துப் பலர் கறிச் சரக்கு வாங்கிச் செல்வதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு தட்டத்தில் கொஞ்சம் மல்லி, ஐந்தாறுமிளகு, கொஞ்சம் சீரகம், ஒரு சிறு மஞ்சள் துண்டு இவ்வளவையும் போட்டு வாங்க வருபவர் சால்வைத் துண்டை விரித்துப் பிடிக்க, அப்பா அந்தச் சரக்கை அதில் கொட்டிவிடுவார். இவ்வளவுக்கும் ஒரு சதந்தான் பெறுமதி. (ஒரு ரூபா அல்ல, ஒரு சதம்!)

பலர் இப்படித்தான் அன்றாடம் கறிச் சரக்கு வாங்குவார்கள். மிகமிகச் சிலர்தான். இவைகளைக் கூடுதலாக வாங்கி உரலிலிட்டு இடித்து, துளாக்கி வைத்திருப்பார்கள். இப்போது உரலாவது உலக்கையாவது! எல்லாவற்றுக்கும் மெஷின்!

கடையின் ஒரு பக்கத்தில் தேங்காய்கள் குவிக்கப்பட்டிருக்கும். ஒரு தேங்காயின் விலை இரண்டு அல்லது மூன்று சதம் இருக்குமென்று நினைக்கிறேன். அதைக்கூட முழுத்தேங்காயாக வாங்குகிறவர்கள் குறைவு. உடைத்துப் பாதித் தேங்காய் வாங்குவார்கள். அதற்கும் வழியில்லாத சிலர் சொட்டாகத் தோண்டி அரைச் சதத்துக்கு வாங்குவதுமுண்டு.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)


**Croydon Tutorial College**

A CENTRE OF ACADEMIC EXCELLENCE
30-32 Southend, South Croydon, Surrey, CR0 1DN
Tel:020 8688 5777 Tel/Fax: 020 8688 5776
Email: admin@croydontutorialcollege.co.uk

**Disappointing Results???**

*Enrol now for GCSE, GCE AS and A2 FULL TIME CLASSES*

**For November/January/June Examinations**

Coaching by experienced tutors
Official Examination Centre for all UK's leading Exam Boards

- Physics
- Chemistry (Including Salters Chemistry)
- Biology
- Maths (Pure, Mechanics, Statistics)
- English
- ICT
- Accounts
- Further mathematics
- Modern Languages
- Business Studies
- Economics

**GCSE REVISION**
English
Mathematics
Physics
Biology
Chemistry
ICT/Computing
French/German/Spanish

- Life In the Uk
- ESOL
- IELTS

Classes already started only a few places left

Evening classes for Years 7, 8, 9, 10, GCSE, AS and A2.

*Press fast forward to reach your potential*

Visit our website - www.croydontutorialcollege.co.uk



South Harrow பகுதியில் GLOBAL VIDEO ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய உதயம்

**Global Fresh Fish**



அனைத்து வகையான தரமான இலங்கை இந்திய கடலுணவு வகைகளை மலிவாக நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள் உங்களின் எண்ணம் போல் வெட்டி சுத்தம் செய்தும் தரப்படும்

இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மீன்கள்

Opening Time: காலை 9.00 முதல் இரவு 7.00

தமிழ் DVD, Audio
பல வகையான நூல்கள் மற்றும் சஞ்சிகைகள்

சிறுவர்களில் இருந்து பெரியவர்கள் வரை உங்களுக்கு பிடித்த முறையில் சிகைஅலங்காரம் செய்துகொள்ள நாடுங்கள்.

Bureau De Exchange,
Cheque Cashing, Money Transfer

| Uniglobe Exchange Ltd | Global Fresh Fish | Sutha Saloon | Global Home Entertainment |
|---|---|---|---|
| 230 Northolt Road | 230 B, Northolt Road | 230 C, Northolt Road | 230 D, Northolt Road |
| South Harrow | South Harrow | South Harrow | South Harrow |
| HA2 8DU | HA2 8DU | HA2 8DU | HA2 8DU |
| Tel: 0208 423 9988 | Tel: 0208 423 9938 | Tel: 0208 864 4143 | Tel: 0208 423 7744 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலி

தொலைபேசி:
020 8694 7412

தொலைநகல்:
020 8694 7412

விளம்பரம்:
020 8694 7412

மின்னஞ்சல்:
Vadalee@lycos.co.uk

இணையம்:
www.vadalee.com

முகவரி:
VADALEE
PO BOX - 24783
LONDON
SE13 7YE

இப் பத்திரிகையை மாதம் தோறும் தபாலில் பெறுவதற்கு ஓர் ஆண்டு சந்தா 7.00 பவுண்கள். ஐரோப்பாவுக்கு 25 யூரோக்கள்

Cheque or Postal order Payable to: VADALEE


# தூக்கம்: ஏற்றமும்... இறக்கமும்

ஒவ்வொரு மனிதனுக்கும் தூக்கம் என்பது இன்றியமையாதது. உணவு, நீர் இன்றி வாழ்ந்ததாக சில மனிதர்களை கூறுவார்கள். ஆனால் தூங்காத மனிதனை எங்குமே காணமுடியாது.

தூங்கும்போது தான் நம்முடைய மூளையின் ஒரு பகுதி ஓய்வு எடுப்பதாக கூறுகிறார்கள் மருத்துவ வல்லுனர்கள். அதேபோல் மறுநாள் உற்சாகமாக வேலை பார்ப்பதற்கு புத்துணர்வை அளிப்பதும் தூக்கம்தான்.

இன்றைய அவசர உலகில் மனிதனுக்கு புதுப்புது வியாதிகளும், உடலில் மிகப் பெரிய பாதிப்புகளும், மன அழுத்தங்களும் உருவாவதற்கு முக்கிய காரணமே... ஆழ்ந்த உறக்கம் இல்லாததுதான்.

இன்றைக்கு பல கோடீஸ்வரர்களும், புகழ் பெற்றவர்களும் சாதாரண பாமரனைப் பார்த்து பொறாமைப் படும் ஒரே விடயம்... எப்படி படுத்தவுடன் தூங்கி விடுகின்றனர்! என்பது தான்

பொதுவாகவே எட்டு மணி நேரத் தூக்கம் எல்லாருக்கும் அவசியம் என்றாலும், குழந்தைகள் பெரும்பாலும் தூங்கிக் கொண்டே இருக்கின்றன.

முன்பெல்லாம், 20 வயது நிரம்பிய இளைஞர்கள் ஆறு முதல் ஏழு மணிநேரம் தூங்குவார்கள். ஆனால் தற்போது இருக்கும் இளவயதினர் இரண்டு மணி நேரம் கூடுதலாக, அதாவது தினமும் 9 மணி நேரம் தூங்குகின்றனர்.

இதற்கு காரணம், வாகனங்கள் இரைச்சல், கூடுதல் மனச் சுமைகள் ஆகியவையே. இவர்கள் தினமும் ஒன்பது மணி நேரம் தூங்க வேண்டும் என்றால் இரவு பத்து மணிக்கு தூங்க ஆரம்பித்தால்தான் காலையில் 7 மணிக்கு எழுந்திருக்க முடியும். இரவு தாமதமாக தூங்கினால் காலையில் ஒன்பதரை மணிக்குத் தான் விழிக்க முடியும். தூக்கம் வராவிட்டாலும் படுக்கையில் படுத்து விடுவது நல்லது.

இன்றைக்கு இருக்கும் இளைஞர்களுக்கு போதை பழக்கம் உள்ளது. இவர்கள் 20 வயதிலேயே மது பழக்கத்திற்கு அடிமையாவதால் இரத்தத்தில் மதுசாரம் கலந்து விடுகிறது. இதனால் ஆழ்ந்த தூக்கம் என்பது தடையாகி விடுகிறது. மதுபழக்கத்தை அறவே நீக்கினால்தான் சுகமான தூக்கத்தை பெறமுடியும்.

மது அருந்தினால் மூன்று மணி நேரத்துக்குப் பின்னரே தூக்கம் வரும். மேலும் தூக்கத்தின் போது மதுவின் தாக்கம் இருப்பதால் ஆழ்ந்த தூக்கமும் இருக்காது. இரத்தத்தில் இருக்கும் மதுசாரத்தை நீக்க... அடிக்கடி தோடம்பழச் சாறு சாப்பிடுங்கள். இதனால் இரத்தத்தில் இருக்கும் மதுசாரத்தின் தாக்கம் குறைந்து தூக்கம் வரும்.

வழக்கமாக தூங்கும் நேரத்திற்கு உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள். தினமும் அதற்கான நேரம் வரும்போது உங்களுடைய மூளையும் தூக்கத்திற்கு தயாராகிவிடும். முதலில் சில நாட்களுக்கு தூக்கம் வராவிட்டாலும் படுத்து விடுங்கள்.

முப்பது முதல் நாற்பது வயதுக்கும் இருப்பவர்களுக்கு ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் குழந்தைகள் இருக்கும். இதனால் அவர்களால் தூக்கத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது. இவர்கள் இருபது வயதில் தூங்கிய தூக்கத்தின் அளவில் 50 சதவீதம் தான் தற்போது தூங்கமுடியும். இதற்கு குடும்ப சூழல் மட்டுமல்ல... கடுமையான வேலைப் பளு, எதிர்காலம் குறித்த பயம், பதட்டம், குழந்தைகள் குறித்த சிந்தனை, அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் என மனஅழுத்தத்தாலும் தூக்கத்தின் அளவு குறையும்.

இவர்கள் ஆறு மணி நேரம் தூங்குவதே பெரிய விடயம் என்றாலும், தினமும் எட்டு மணி நேரம் தூங்குவது அவசியம். தூக்கமில்லாமல் அவதிப்படுவோருக்கு வைட்டமின் பி5 பற்றாக்குறையாக இருக்கும். இந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட...ஈரல், காளான், பயறு வகைகள், முட்டை, கோதுமை ஆகிய உணவு வகைகளை சாப்பிடுவது நல்லது. இதனால் மன அழுத்தத்தை உருவாக்கும் கோர்மோன்களின் எண்ணிக்கை குறையும். தூக்கத்திற்காக மாத்திரை சாப்பிடுவோர், மருத்துவரின் ஆலோசனை யுடன் சாப்பிட வேண்டும். ஏனென்றால் தூக்கத்திற்காக சாப்பிடும் மாத்திரை, மருந்துகளே பின்னாளில் உறக்கத்தின் எதிரியாக உருவாகக் கூடும். தூக்கத்தை விரும்புவோர்கள் படுக்கை அறைக்கும் தொலைக்காட்சி வைக்கக் கூடாது.

தூக்கமின்மையால் அவதிப்படுவோர், மாலை நேரத்தில் கொஞ்சதூரம் நடக்கலாம். இல்லாவிட்டால் உடற்பயிற்சி செய்யலாம். நாற்பது முதல் ஐம்பது வயதுக்கும் இருப்பவர்களால் தூக்கத்தை தன்வசப்படுத்த முடியும். 50 வயதுக்கு மேல் தூக்கம் இவர்களுக்கு வசப்படாது! பெரும் பாலானவர்கள் தூக்கமின்மையால் அவதிப் படுவார்கள். 50 வயதுக்கு மேல் உள்ள பலர் நான் அதிகாலை 4 மணிக்கெல்லாம் எழுந்து விட்டேன் என்று பெருமையாக கூறுவார்கள். உண்மையில் இவர்கள் தூக்கமில்லாமல்தான் எழுந்திருப்பார்கள்! இவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்... எப்போது எழுந்தோன் என்பது முக்கியமில்லை... எவ்வளவு நேரம் தூங்கினோம் என்பதே முக்கியம்!

# தமிழக அரசியலில் கச்சதீவு

கச்சதீவு பகுதியில் தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையால் தாக்கப்படுவதும் சிறைபிடிக்கப்படுவதும் கொல்லப்படுவதும் அதிகரித்து வருகிறது. இது தமிழக அரசியலில் கச்சதீவு விடயத்தை சூடுபிடிக்க வைத்துள்ளது. ஆண்டாண்டு காலமாக பல தலைமுறைகளாக இருந்து வரும் மீன் பிடிக்கும் உரிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது என்று தமிழக மீனவர் சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளது. இந்நிலையில் அண்மையில் இது தொடர்பாக கட்டுரை ஒன்று தினமணியில் வெளிவந்தது அதில் கச்சைதீவ பற்றிச் சொல்லப்பட்ட வரலாற்றுப் பின்னணி கீழே தரப்படுகிறது:

கி.பி.1480 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக இராமேஸ்வரம் தீவும், அதைச் சுற்றி 11 தீவுகளும் தோன்றியுள்ளன. இத்தீவுகள் தமிழகத்தின் நிலப்பரப்பில் இருந்துதான் துண்டிக்கப்பட்டன என்று இராமநாதபுரம் மாவட்ட அரசு வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது.

இந்தத் தீவுகளில் ஒன்றுதான் கச்சதீவு என்பது, இராமேஸ்வரத்திலிருந்து 12 மைல் தொலைவிலும், இலங்கையிலிருந்து 13 மைல் தொலைவிலும் உள்ளது.

இது கிழக்கு மேற்காக ஒரு மைல் தூரமும், வடக்கு தெற்காக அரை மைல் தூரமும் கொண்டது. இதன் பரப்பளவு 3.75 சதுர மைல், அவ்வளவுதான்.

இந்தத் தீவுகள் எல்லாம் இந்தியாவுக்கும், இராமநாதபுரம் சேதுபதி மன்னருக்கும் சொந்தமாக இருந்தன. இராமநாதபுரம் பகுதியை ஆண்ட சேதுபதி மன்னர்களுக்கு வருவாய் தரும் தீவுகளாக இருந்தன.

1947 இல் நாடு (இந்தியா) விடுதலை யடைந்ததும் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் வந்தது. அதனால் மன்னரின் உடைமைகள் மக்கள் உரிமையானது.

சேதுபதி மன்னர்கள் ஆட்சியில் இருந்தவரை இந்தத் தீவு முத்துக்குளிக்கும் இடமாகப் பயன்பட்டு வந்தது. அத்துடன் சித்த மருத்துவத்துக்குப் பயன்படும் மூலிகைகளின் சோலைவனமாகவும் இருந்தது.

இராமநாதபுரம் மக்கள் "உமிரி" என்ற செடிவகையைத் தீராத நோய்களுக்குச் சிறந்த மருந்தாக நம்பினர். அத்துடன் "சாய வேர்" போன்ற வேர் வகைகளும் பயன்பட்டன.

இந்தத் தீவுக்குச் சென்று இந்த மூலிகைகளைக் கொண்டு வருவதையே தொழிலாகச் சோழமண்டல மரக்காயர்கள் கொண்டிருந்தனர்.

இங்கே முத்துக்குளிக்கவும், மூலிகைகளைக் கொண்டு வரவும், மீன் பிடிக்கவும் விரும்பினால் சேதுபதி மன்னரின் அனுமதி பெற வேண்டும். அவர்கள் குத்தகைக்கு விட்டு வருவாய் பெற்றதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் ஆட்சியில் இருந்து வந்ததற்கு 1822 முதல் ஆவணச் சான்றுகள் உள்ளன. கிழக்கிந்தியக் கம்பெனி, 1822 இல் ஓர் ஒப்பந்தம் மூலம் இராமநாதபுரம் மன்னரிடமிருந்து கச்சதீவைப் பயன்படுத்திக் கொள்ளும் இசைவைப் பெற்றது. 69 கடற்கரை ஊர்களும், 8 தீவுகளும் சேதுபதி மன்னர்களுக்குச் சொந்தமாக இருந்தன. அந்த எட்டுத் தீவுகளில் ஒன்றுதான் கச்சதீவு.

இங்கிலாந்து பேரரசி விக்டோரியாவின் காலத்தில் இலங்கையைப் பற்றி வெளியிடப் பட்ட பொது அறிவிப்பில் இலங்கையின் எல்லைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, கச்சதீவு குறிக்கப்படவில்லை. இராமநாதபுரம் அரசரைப் பற்றிய குறிப்பில் கச்சதீவு அவருக்கு உரியதென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதனை முன்னாள் இலங்கை அமைச்சரவைச் செயலாளர் பி.ஈ.பிரிஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் பழைய வரலாற்று ஆவணங் களில் இத்தீவைப் பற்றிய விவரம் ஏதுமில்லை. டச்சுக்காரர்கள் மற்றும் போர்த்துக்கீசியர்கள் இலங்கையை ஆண்டபோது அவர்களின் ஆட்சி எல்லைக்குள் கச்சதீவு இடம்பெற்றிருக்க வில்லை. அவர்கள் ஆட்சி ஆவணங்களிலோ, குறிப்பேடுகளிலோ "கச்சதீவு" குறிப்பிடப் படவில்லை.

17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கை வந்த வரலாற்று ஆய்வாளர் பர்னோ:ப். அந்நாட்டின் தேசப்படம் ஒன்றை உருவாக்கினார்.

இலங்கையின் நூல்களான மகாவம்சம், ராஜாவளி, ராஜரத்னாசரியை இவற்றின் துணையோடு அவர் உருவாக்கிய தேசப் படத்தில் "நெடுந் தீவு" வரைதான் இலங்கையாக காட்டப்படுகிறது. நெடுந்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)


## Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள் - Lewisham

**ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு.**




**தொடர்புகளுக்கு: பிரபா, Tel: 07749 051 394**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனிப் பிரியர்களுக்கு ஓர் இலவசம்

இன்று உலகம் கணனிமயமாகி விட்டதை, நாம் எல்லோருமே நன்கறிந்துள்ளோம். கணனிகள் வரவால், பல நிறுவனங்கள், குறிபபாக வங்கிகள் தமது ஊழியர்களைக் குறைத்துக் கொண்டு, கணனிகள் இயங்கும் இயந்திரங்கள் மூலம், தமது வாடிக்கை யாளர்களுக்கு அளப்பரிய சேவை செய்து வருகின்றார்கள். பாடசாலைகளில், கல்வி முறையும், கணனிகள் கொண்டு, மாணவர் களை நெறிப்படுத்தத் தொடங்கிவிட்டன. இணையத்தின் வரவு, இன்று உலகத்தைச் சிறிதாக்கி இருப்பதோடு, உலக நடப்புகளை, அந்தந்த நேரத்தில் அறியும் வாய்ப்பை அளித்து வருகின்றன.

Microsoft நிறுவனம், கணனி உலகின் சக்கரவர்த்தியாகத் திகழந்தாலும், இவற்றின் வளர்ச்சியை முடக்கவென்று பல நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டு செயற்பட்டு வருகின்றன. இந்த வழியில், Microsoft நிறுவனததின் பிரபல்யமான மென்பொருள் உற்பத்தியான Office இன் செல்வாக்கை வீழ்த்த, ஒரு புதிய இலவச மென்பொருள், இணையவழியாக பதிவிறக்கம் செய்ய வழிசமைத்திருக்கின்றது Sun Microsystems என்ற நிறுவனம். MS Office என்ற மென்பொருளில் இருக்கும் பல வசதிகள், இந்த மென்பொருளிலும் உண்டு. இதை விரும்பிய எவரும், எத்தனை தடவைகள் விரும்பினாலும், இலவசமாகப் பதிவிறக்கம் செய்யது கொள்ளலாம் என்கிறது இந்த நிறுவனம். OpenOffice.org 2 என்று இந்த மென்பொருளை அழைக்கின்றார்கள். தமது 20 வருடங்களுக்கு மேறபட்ட உழைப்பின் விளைச்சல் இது என்கிறது நிறுவனம். இது உங்களுக்கு விரும்பிய மொழியில் கிடைக்கின்றது என்பதோடு, இதன் கோப்புகளை சேமித்து, வேறு எந்த மென்பொருளுடனும் இணைவாக்க முடியும் என்று மேலும் சுட்டிக்காட்டுகின்றது இந்த நிறுவனம்.

இது முழுக்க முழுக்க இலவசமாகவே வழங்கப்படுகின்றது. நீங்கள் இதற்கு எந்தக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை என்று நமக்கு உற்சாகம் தருகிறார்கள் இவர்கள். மைக்ரோசொப்ட் நிறுவன உற்பத்திகள் ஆனைவிலை குதிரைவிலை என்பதையும், களவில் பதிவிறக்கம் செய்த மென்பொருள் தான், பலர் பாவனையில் உள்ளது என்பதையும் நாம் கருத்தில் கொண்டாக வேண்டும். நீங்கள் பதிவிறக்கம் செய்வதோடு நின்றுவிடாமல், அதைப் பிரதி செய்து, உங்கள் நண்பர்களுக்கும் கொடுங்கள் என்று தாராளமனதோடு, நமக்குச் சொல்கின்றது இந்த அமெரிக்க நிறுவனம்.

தனது எதிரியை வீழ்த்த, இவர்கள் வகுக்கும் வியூகம் இது என்பது நமக்கு நன்றாகவே புலனாகின்றது. பதிவிறக்கம் செய்து பார்த்ததில், இந்த மென்பொருள் மிகமிகப் பயனுள்ளது என்பதும் தெரிய வந்திருக்கின்றது. மிகப் புதிதாக வந்த Office 2007 ஐ ஒத்த இந்த மென்பொருள், செலவின்றிக் கிடைக்கும் அதே வேளை, இலகுவான பாவனைக்கும் வழிகோலுகின்றது. Openoffice write, Openoffice calc, Openoffice impress, Openoffice draw, Openoffice Base என்று இந்த மென்பொருளில் 5 பிரிவுகள் இருக்கின்றன.

தனிப்பட்ட காரணங்களாகட்டும், வர்த்தக ரீதியிலாக இருக்கட்டும், அல்லது கல்வி சம்பந்தமாக இருக்கட்டும் இலவசம் இலவசம் இலவசம் என்று வாய்க்கு வாய் சொல் கின்றார்கள் இவர்கள்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது ஒரு முதுமொழி. இங்கேயோ கூத்தாடிகள் இரண்டுபட்டிருக் கின்றாகள். ஊருக்குத்தான் இப்பொழுது கொண்டாட்டம். அனுபவி ராஜா அனுபவி..

**ஏ.ஜே.ஞானேந்திரன், பாசல் சுவிஸ்**


# அம்பாள் ஜுவல்லர்ஸ்

- உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயர்ரக டிசைன்கள் உங்கள் எண்ணத்தை நிஜமாக்கி ஜெலிக்க வைக்கும் நேர்த்தியான தங்க நகைகள்
- கலை வண்ணத்தைப் பிரதிபலிக்கும் புத்தம் புது நகைத் தேர்வுகள்
- நெஞ்சில் இன்பத்தை விளக்கேற்றும் தங்க நகை அரங்கம் அம்பாள் ஜுவல்லர்ஸ்



Ambaal Jewellers
176 Upper Tooting Road
Tooting
London SW17 7ER
**Tel: 020 8672 9955**
**Fax: 020 8672 7097**


# வாழைப்பழம் சாப்பிட்டால் ஆண் குழந்தை பிறக்கும் !

பிறக்கப்போகும் குழந்தை ஆணா? பெண்ணா? என்பதை நிர்ணயிப்பது பெண்கள் சாப்பிடும் சாப்பாட்டில் தான் உள்ளது என்கிறார்கள், ஆராய்ச்சியாளர்கள். அவர்கள் நடத்திய ஆராய்ச்சி மருத்துவ மஞ்சரி ஒன்றில் வெளியாகி உள்ளது. அதில் மேற்கத்திய நாடுகளில் சமீப காலமாக அதிக அளவில் பெண் குழந்தைகள் பிறந்து இருப்பதற்கும் ஆண் குழந்தைகள் பிறப்பது குறைந்து போனதற்கும் பெண்கள் கொழுப்பு குறைவான உணவை சாப்பிடுவதும், காலை உணவை தவிர்ப்பதும் தான் காரணம் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

பொட்டாசியம், கால்சியம், வைட்டமின் சி, இ, மற்றும் பி.12 ஆகியவை அதிகம் உள்ள உணவை பெண்கள் சாப்பிட்டால் ஆண் குழந்தை பிறக்கும் என்றும் ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்தார்கள். பெண்கள் தானியங்கள் (அரிசி, கோதுமை, ஓட்ஸ் போன்ற உணவு) அதிகமாக சாப்பிடவேண்டும். வாழைப்பழம் அதிகமாக சாப்பிடவேண்டும். உப்பு அதிகம் சேர்த்துக்கொள்ளவேண்டும். 400 கலோரி சத்து உள்ள உணவை தினமும் சாப்பிட வேண்டும். இப்படி சாப்பிட்டால்



ஆண்குழந்தை தான் பிறக்கும் என்று அந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

இங்கிலாந்து எக்ஸ்சிற்ரர் பல்கலைக்கழகத்தைச் சோந்த டாக்டர் பியானோ மாத்தியூஸ் தலைமையிலான குழுவினர் இந்த ஆராய்ச்சியை நடத்தினார்கள்.

இனி முருங்கைக்காய்க்கும் வாழைப் பழத்திற்கும் ஓகோ தான்.

# பிரித்தானிய மக்கள் பிரதிநிதிகளுக்கு "வெண்புறா" குறித்து விளக்கம்

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் நகர சபை உறுப்பினர்களுக்கு "வெண்புறா" அமைப்பின் பணிகள் விளக்கப்பட்டுள்ளன. இலண்டனில் உள்ள "வெண்புறா"



அமைப்பின் அலுவலகத்தில் கடந்த மாதம் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை இச்சந்திப்பு நடைபெற்றது.

பிரித்தானியாவின் ஆளும் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சதீக் கான; (Sadiq Khan) நகர சபை உறுப்பினர்களான றெக்ஸ் ஒஸ்போன் (Rex Osborn) பிலி றன்டால் (Billi Randall ) ஆன்டிகிப்ஸன் (யுனெல புடை-டிழளெ) ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

"வெண்புறா" சார்பாக அதன் ஐரோப்பிய பொறுப்பாளர் என்.எஸ் மூர்த்தி, அலுவலக நிர்வாகப் பொறுப்பாளர் பொன். சத்தியசீலன் மற்றும் தொண்டர்களும் கலந்து கொண்டனர். தாயகத்தில் "வெண்புறா" அமைப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், படை நடவடிக்கைகளால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலம், மனிதநேய பணிகளை மேற்கொள்ள முடியாத தடைகள் ஆகியன தொடர்பாகவும் இச்சந்திப்பில் விளக்கமளிக்கப் பட்டுள்ளது என்று என்.எஸ் மூர்த்தி தெரிவித்தார்.




SRI SIVASAKTHY
ASTROLOGICAL CENTRE
**Pandith Laxsmana Shastry**



# பண்டிதர். லக்ஸ்மன் சாஸ்திரி

**மலையாள பகவதி அருள் கொண்டு பார்க்கப்படும்**

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம் துன்பங்கள், நன்மை தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார் ஜேதிட நிபுணர் லக்ஸ்மன் சாஸ்திரிகள். நீங்கள் அனேக ஜோதிடர்களிடம் ஜோதிடம் பார்த்திருக்கலாம் இவரை ஒரு முறை சந்தியுங்கள் கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, காதல் கலியாணம், வீசா என்பன பார்த்துச் சொல்லப்படும்.

நிலம், வீடு, யோகம், அதிஸ்ட நம்பர்கள், கோட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு, கண்திருட்டி, போன்றவைகளுக்கு பரிகாரம் செய்வார். உடன் சந்தியுங்கள். தமிழ், இந்தி, ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகள் பேசப்படும், மலையாள மாந்தரீகம் படித்தவர்.

**AKILAN ENTERPRISES LTD**
**274 High Street North**
**East Ham, London E12 6SA**

**Tel: 07939 095 099 &**
**07507 089 785**

(OPENING HOURS 9.30AM TO 8.00PM)



உங்கள் அபிமான
வடலியை இப்பொழுது இணையத்திலும் பார்வையிடலாம்

**www.vadalee.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டின் ஆரம்பம்!

ஈழத்தவராகிய எம்மத்தியில் மூன்றுவகையான ஆண்டுகள் உள்ளன. இம் மூன்றில் இஸ்லாமியர்களின் ஆண்டில் பிறையை மையமாக வைத்து மாதங்களைச் சீராகக் கணிக்கிறார்கள். 12 பிறைகள் முடிய ஆண்டும் முடியும். இதற்கு 354 நாட்கள் மட்டுமே தேவைப் படுகிறது. அதனால் அவர்களுக்கு இவ்வாண்டில் அதாவது 2008-ன், தையில் ஒன்றும் மார்கழியில் ஒன்றுமாக இரண்டு புத்தாண்டுகள் பிறக்கின்றன. பருவ காலங்களுடன் எவ்வித தொடர்பும் அற்றதாக இருந்தாலும் சமயத்துடன் சம்பந்தப் பட்டுள்ள காரணத்தால் உலகின் முஸ்லீம்களால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பெரும்பாலான ஈழத்தமிழ்பேசும் மக்களால் கொண்டாடப்படும் தமிழ் புத்தாண்டு பற்றிப் பார்க்கு முன்னர் ஆங்கில ஆண்டு பற்றிப் பார்ப்போம்.

பருவ காலங்களையே மையமாக வைத்து கணிக்கப்படும் ஆண்டு இது ஒன்றுதான். ஆரம்ப காலங்களில் இதிலும் சிறிது குழப்பம் இருந்தது. 1580களில் கிரகோரி என்னும் போப்பாண்டவர் அவர்கள் இதை மிகவும் கவனமாகக் கணித்துள்ளார்.

பூமி கதிரவனை ஒரு முறை வலம் வர முன்நூற்றி அறுபத்தைந்தே கால் நாட்களிலும் பார்க்கக் கிட்டத்தட்ட .0075 நாட்கள் குறைவாகவே தேவைப்படுகிறது. இது 400 ஆண்டுகளில் மூன்று நாட்களாகிவிடும். இதை போப்பாண்டவர் வியக்கத் தக்க முறையில் கையாண்டுள்ளார். "00" இல் முடியும் எல்லா ஆண்டுகளையுமே நான்கால் பிரித்தால் மிச்சம் வராது. ஆகையால் அவை லீப் ஆண்டுகளாகக் கணிக்கப்பட வேண்டிய தகைமை பெற்றவை. கிரகோரியாரின் முறையின்படி 00 இல் முடியும் ஆண்டுகள் 400 ஆல் பிரித்து மிச்சம் வரா விட்டால்தான் லீப் ஆண்டு. இல்லாது மிச்சம் வந்தால் சாதாரண ஆண்டு. எடுத்துக்காட்டிற்கு 2000 ஆம் ஆண்டு லீப் ஆண்டு. 2100, 2200, 2300 ஆகியவை சாதாரண ஆண்டுகள். 00 இல் முடியும் அடுத்த லீப் ஆண்டு 2400. இப்படிச் சீர் செய்த பின்பும் சில வினாடிகள் மிஞ்சுகின்றன. அவை ஒரு நாளா திரள்வதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலே செல்லும். அதை 30ம் நூற்றாண்டு வரும்போது பார்ப்போம்.

தமிழ்ப் புத்தாண்டும் பருவ காலங்களை மையமாக வைத்து கணிக்கப்படும் ஆண்டுதான். விண்மீன்களை மையமாக வைத்து விண்ணையே 12 மாதங்களுக்குமான வீடுகளாகப் பிரித்து அமைக்கப்பட்ட ஆண்டு. பூமி ஒரு சீராக தன்னைத்தானே சுற்றுவதுடன் கதிரவனையும் சுற்றி வந்தால் கிரககேரியன் ஆண்டும் தமிழ் ஆண்டும் ஒரே காலத்தினுள் அடங்குபவையாகத்தான் அமைந்திருக்கும். ஆனால் பூமி தன்னைத்தானே சுற்றுவதுடனும் கதிரவனைச் சுற்றுவதுடனும் சிறிது தள்ளாடவும் செய்கின்றது. இத்தள்ளாடல் காரணமாக கிரகோரியன் ஆண்டைவிட கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் தமிழ் புத்தாண்டிற்கு கூடுதலாகத் தேவைப்படுகிறது. 72 ஆண்டுகளில் 1440 நிமிடங்கள் அதாவது ஒரு நாள் கூடுதலாகத் தேவைப்படுகிறது. ஆயிரம் ஆண்டுகளில் பருவ கால ஆண்டைவிட இரண்டு வாரங்கள் பின் தங்கி விடும்.

பருவ காலங்களுடன் ஒத்துப் போக வேண்டுமென்றால் 2 ஆயிரம் ஆண்டுகளில் இராசிகள் வக்கரித்து (பின் சொன்று) அடுத்த இராசிக்குள் புக வேண்டும். இதனால் இராசிகளுக்குரிய நட்சத்திரங்களே மாறிவிடும். சித்திரை மேட சங்கிராந்தியை சோதிடர்கள் தங்கள் கணிப்புக்குப் பயன் படுத்த முடியாமல் போய்விடும். இதே நிலைதான் மகர சங்கிராந்திக்கும். ஆகையால் தமிழருக்கு "தை" சிங்களவருக்கு "சித்திரை" என்ற வீண் வாதங்களை விடுத்து பருவ காலங்களுடன் நாட் பிசகாது கணிக்கப்படும் ஆங்கிலத் தை முதலாம் திகதியை எல்லோரும் புத்தாண்டாக ஏற்றுக் கொண்டாடினால் ஒரு சீரில் இயங்கலாம் என்பது எனது கருத்து

எமக்கு தெரியாமல் நாங்களே இதை நடை முறைப் படுத்துகின்றோம் என்றுதான் கருதவேண்டி உள்ளது. தை முதலாம் திகதி என்றதும் அது எந்தத் தை என்று கேட்குமளவுக்கு சனவரி என்ற சொல்லுக்குப் பதிலாக தை என்ற சொல்லை உபயோகிக்கின்றோம். விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறந்த நாளும் கார்த்திகை 27 என்று சொல்லப்படுகிறதே அன்றி நவம்பர் 27 என்று சொல்வதில்லை. அந்த அளவுக்கு ஆங்கிலத் திகதியை பயன்படுத்துகிறோம். இங்குள்ள தமிழர் வர்த்தக நிலையங்களில் கைவிசேடம் என்பதை ஆங்கிலத் தை முதலாம் திகதி தான் கொடுக்கிறார்கள். சித்திரைப் புத்தாண்டு அன்று கொடுப்பதில்லை. இங்குள்ள கோயில்களில் சித்திரைப் புத்தாண்டுக்கோ சனவரிப் புத்தாண்டுக்கோ கூடுதல் ஆட்கள் போகின்றார்கள் என்றால் வித்தியாசம் காண்பது சிரமம். நான் 21 திகதி பிறந்தேன் என்று தெரியும், தமிழ் மாதத்தில் அது எத்தனையாம் திகதி என்றால் எனக்குத் தெரியாது.

தமிழர்களின் தலைசிறந்த நூலான திருக்குறளை மையமாக வைத்து தைப் பொங்கலில் இருந்து வள்ளுவர் ஆண்டைக் குறிக்கிறார்கள். ஆனால் 2008க்குப் பதிலாக 2039 என்று போட வேண்டுமென்றால் எளிதில் போட முடியாது. வள்ளுவர் 2039 என்றுதான் போட வேண்டும். தமிழ் நாட்டு அரசு இது விடயத்தில் ஏதோ மாற்றங்கள் கொண்டு வந்துள்ளார்கள். மாதங்களுக்கும் புதிய தமிழ் பெயர்கள் சூட்டுவார்களா! வக்கரத்திற்கு பரிகாரமும் நிச்சயம் தேடுவார்களா! பொறுத்திருந்து பார்ப்போம்

**-சி.மாசிலாமணி**

# மன நலனும் உடைகளும்

தங்களது குடும்ப பாரம்பரியத்திற்கு ஏற்ப இனத்துவ உடைகளையே அணியும் சிறுபான்மை இனத்தைச்சோந்த இளம் பெண்கள் நல்ல மனநலம் கொண்டவர்களாக உள்ளனர் என ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது.

இலண்டன் குயின்மேரி பல்கலைகழகம் நடத்திய ஆய்வில், பாரம்பரிய உடைகளில் வரும் வங்காளதேசத்துப் பெண்களுக்கு நடத்தை மற்றும் உணர்ச்சி வசப்படும் பிரச்சினை குறைவாகவே உள்ளது என கண்டுள்ளார்கள்.

இவ் ஆய்வுடன் தொடர்புடைய பேராசிரியர் "காம் பூய்" இதுபற்றிக் கூறுகையில் "மரபு ரீதியான இனத்துவ உடைகள் ஒரு நெருங்கிய குடும்ப அலகு என்ற உணர்வை ஏற்படுத்துவதால் இளையோர் முகம் கொடுக்கும் அழுத்தங்களிலிலிருந்து அவர்களை பாதுகாக்கின்றது" என்கிறார்.

11-14 வயதிற்குட்பட்ட பிரித்தானிய வெள்ளை மற்றும் வங்காள தேசத்தைச் சேர்ந்த 1000 பேரிடம் அவர்கள் கலாச்சாரம், சமூகவாழ்வு உடல்நலம், சம்பந்தமான கேள்விகளுடன் உணர்ச்சி, உளப்பிரச்சினை போன்ற வற்றையும் வெளிக்கொணரக்கூடிய முறையில் அமைக்கப்பட்ட கேள்விகளும் கேட்கப்பட்டன.

பாரம்பரிய உடையில் வரும் வங்காள தேசத்தைச் சேர்ந்த இளம்பெண்கள், கலப்பு கலாச்சார உடைகளையும் பிரித்தானிய வெள்ளைக் கலாச்சார உடைகள் அணிபவர் களிலும் பாாக்க கனிசமான அளவு குறைவான மனப்பிரச்சினைகனை கொண்டவர்களாகவே ஆய்வில் காணப்பட்டார்கள்.

இந்த அய்வு தனக்கு ஆச்சரியத்தை தந்தது என்று பேராசிரியர் "காம் பூய்" கூறியுள்ளார் ஏனென்றால் பொதுவான பிரித்தானிய கலாச்சாரத்தில் கலக்காதவர்களுக்கு கூடுதலான மனஅழுத்தம் இருக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது என்றார்.


## ஓம் ஸ்ரீகருமாரி அம்மன் ஜோதிட நிலையம்



இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள SB லக்ஷ்மணாராஜூ குருஜூ Aadivasi General Secretary (Face Reading) Durga Poojari திருமதி சுபலக்ஷ்மி அவர்கள் கைரேகை, முகநாடி, ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களை தமிழில், தெலுங்கில், ஆங்கிலத்தில் கூறுவார்.

**துல்லியமாக கணித்து பார்க்கப்படும் விடயங்கள் (Astrology)**

★ கணவன் மனைவி ஒற்றுமையின்மை
★ கைரேகை, முகநாடி, வசியப்பொருத்தம், பஞ்சாங்கம் பார்த்தல்
★ திருமணயாதகம், குறிப்பு பொருத்தம், வசியம், ஆண். பெண்
★ வாஸ்து சாத்திரம், நாட்டில் ஏனைய பிரச்சினைகள்
★ தொழில் வியாபார லட்சுமிகரம் விடயமான வசியப்பொருத்தம்
★ எதிரிகள், கண்திருக்ஷ்டி , கோட் வழக்குகள்
★ வாகனப்பொருத்தம் லட்சுமி வசீகரம்
★ பெண்பிள்ளைகள் ஒற்றுமையாக பெற்றோருடன் நிலைத்திருத்தல்
★ பிரிந்தவர் ஒன்றுகூடுதல் எங்கு இருந்தாலும்
★ கிரகப் பிரவேக்ஷம் - லட்சுமி பூசை- குரு பூசை



ஆகியவை நல்ல முறையில் கணித்தும் பூசை செய்தும் விபரங்கள் குருஜி ஆசீர்வாதத்துடன் செய்து தரப்படும்.

*இவர் நியுசிலாந்து பாரீஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ் மற்றும் பல உலகநாடுகள் எங்கும் விஜயம் செய்துள்ளார்.*

விபரங்களை கீழ்வரும் இணையத்தளத்திலும் சென்று பார்வையிடலாம்
**www.myhighst.co.uk**

**F.C.C Super Store**
**Manor Park,**
**244-246 High Street North,**
**London E12 6SB**

**Mobile:**
**07852 506 993**
**07983 204 697**
**020 8470 6564**



## மாருதி Maruthy Cash & Carry



**இலங்கை இந்திய உணவுப் பொருள்கள் கடலுணவு வகைகள் பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள். தமிழ், இந்தி சினிமா, DVD, CD, VHS போன்றவற்றை பெறுவதற்கு நாடவேண்டிய இடம் மாருதி Cash & Carry**

கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்.... 020 8905 7765

**MARUTHI CASH & CARRY**
**15-17 Queensbury Station Parade**
**Queensbury**
**HA8 5NR**

**Tel: 020 8952 6655**
**020 8381 3442**
**Fax: 020 8905 7546**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கு ஆசிய மக்களை அதிகளவு தாக்கும் மாரடைப்பு

உலகிலுள்ள இனக் குழுமங்களில் அதிகளவில் மாரடைப்பு நோயால் மரணமடைவது தெற்காசிய நாட்டவர்களே என்ற அதிர்ச்சித் தகவலொன்று அண்மையில் வெளியாகியுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம் ஆகியவற்றை தாயகமாகக் கொண்ட மக்கள் ஏனைய இனக்குழுமங்களிலும் பார்க்க 5-10 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்து விடுவதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன

தெற்காசியர்களுக்கு மாத்திரம் ஏன் மாரடைப்பு நோய் அதிகளவுக்கு ஏற்படுகின்றது என்பதற்கான காரணத்தை கண்டறிவதில் ஆராய்ச்சியாளர்கள் தற்போது முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர். தெற்காசியாவைச் சேர்ந்த நபரொருவரின் மரபணுவுக்கும் அவரின் வாழ்க்கை முறைமைக்கும் இடையிலான தன்மைகளை இனங்கண்டு சிறப்பான முறையில் எவ்வாறு சிகிச்சையளிப்பது என்பது குறித்தும் வழிகாட்டல்களை வழங்குவது குறித்தும் இப்போது கவனம் செலுத்தப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதேசமயம், மாரடைப்புநோய் அதிகமாக தாக்குவது தொடர்பான விழிப்புணர்வை தெற்காசிய சமூகத்தவர்களிடையே ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமென நிபுணர்கள் கருதுகின்றனர்.

கனடா ஸ்கார்பொரோவைச் சேர்ந்த இதய சத்திரசிகிச்சை நிபுணரான விவியன்ரம்பி கார் என்பவர் இதய நோய் சம்பந்தமாக அதாவது மாரடைப்பு அதிகளவில் தாக்குவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'இதயத்திற்காக இரு நிமிடங்கள்' நிகழ்ச்சியை ஆரம்பித்து அறிவூட்டலை வழங்குவதாக செய்தியொன்று வெளியாகியுள்ளது.

வானொலி, தொலைக்காட்சி, திருமண வைபவம், அரசியல் நிகழ்ச்சிகள் போன்றவற்றில் ஆரோக்கிய மேம்பாட்டுக்காக குறிப்பாக இதய ஆரோக்கியம் தொடர்பாக குறைந்தது இரு நிமிடங்களாவது பேசுவது என்பதே இந்தத் திட்டமாகும்.

தெற்காசியர்களே அதிகளவில் மாரடைப்பால் மரணமடைவதாக அண்மையில் 'ஸ்ரார்' பத்திரிகையே முதலில் எச்சரிக்கை விடுக்கும் செய்தியை வெளியிட்டிருந்தது. மக் மாஸ்டர் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் மற்றும் அமெரிக்க மருத்துவ சங்க வெளியீடுகளில் இந்த ஆபத்துப் பற்றி ஆய்வுக் குறிப்புகள் வெளியாகியுள்ளன.

பருத்ததொந்தி, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் அதிகரித்து காணப்படுதல், நீரிழிவு என்பனவே தெற்காசிய சமூகத்தின் இதயச் செயற்பாட்டு முறைமையை




கடுமையாக தாக்குவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

உயர் இரத்த அழுத்தமும் நீரிழிவுமே தெற்காசியரின் இதயம் சார்ந்த முறைமைக்கு அதிகளவு கேடு விளைவிப்பதாக கனடாவைச் சேர்ந்த இதய நோய் சிகிச்சை நிபுணர் சுபோத் வர்மா தெரிவித்திருக்கிறார். முன்கூட்டியே பரிசோதனை செய்வதன்மூலம் மாரடைப்பு வருவதற்கு முன்னராக பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியுமென அவர் நம்புகிறார்.

உலகிலுள்ள ஏனைய இனக்குழுமங்களிலும் பார்க்க தெற்காசியரின் உடல் உறுப்புகள் ஒப்பீட்டளவில் பருமனாக இருப்பதாகவும் அவர்கள் உணவருந்தும் அதே அளவுக்கு பயிற்சியில் ஈடுபட்டாலும் உடல் உறுப்புகளின் பருமன் பெரிதாகக் காணப்படுவதாக இனத்துவத்திற்கும் இதய நோய் மற்றும் நீரிழிவுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த நிபுணரான மக் மாஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சோனியா ஆனந்த் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையரைப் பொறுத்தவரை முன்கூட்டியே பரிசோதனை மேற்கொள்வதென்பது தாழ்ந்த மட்ட, நடுத்தரவர்க்கத்தைச் சார்ந்தோருக்கு நடைமுறைச் சாத்தியமில்லாத விடயமாகும். பொருளாதார வசதி படைத்தோரே நோய் வருமுன் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

நாட்டில் அரசாங்க மருத்துவமனைகள் இருக்கின்ற போதிலும் அங்கு போதிய உபகரணங்களோ, மருத்துவர்களோ, நவீன வசதிகளோ கொழும்பு போன்ற இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் இல்லை.

ஆனால், மாரடைப்பு நோயாலேயே அதிகளவானோருக்கு ஆபத்து என்ற விழிப்புணர்வை சமூகத்தின் சகல மட்டத்திற்கும் இலகுவாகக் கொண்டு செல்ல முடியும். சமூக மட்டத்தில் இடம்பெறுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளை இதற்குரிய களமாக பயன்படுத்த முடியும்.

மேலும், மாரடைப்பு அதிகளவு ஏற்படுவதற்கு பிரதான காரணமாக, இலங்கையர் உட்பட தெற்காசியர் மத்தியில் அதிஉயர் இரத்த அழுத்தமே காரணமென கூறப்படுகிறது. இதற்கும் இலவசமான சிகிச்சை முறையை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருக் கிறார்கள்.

'உயர் அழுத்தம்' தொடர்பான அமெரிக்க சஞ்சிகையின் இம்மாத (பங்குனி) வெளியீட்டில் கென்ரக்கி பல்கலைக்கழகம் நடத்திய புதிய ஆய்வறிக்கையொன்று வெளியாகியுள்ளது. அதில் உடல், உள ரீதியான ஆறுதலைப் பெறுவதற்கு தியானமே சிறந்த சிகிச்சையென சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. தியானமானது உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதுடன், மருந்துகளை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகளிலிருந்தும் தப்புவதற்குரிய அனுகூலத்தை தருகின்றது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இது மிகவும் இலகுவானதும் இலவசமானதுமான சிகிச்சையல்லவா? யாவரும் முயன்று பார்க்கலாம்தானே.

**Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள்**

**Lewisham**

**பிரித்தானிய குடியுரிமை பெற Life in the UK என்னும் பரீட்சையில் சித்தி அடைந்து இருக்கவேண்டியது அவசியமாகும். இதற்கான வகுப்புகள் லூாசியத்தில் (Lewisham) இரு இடங்களில் நடைபெறுகின்றன.**

**ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு. விரும்பினால் உங்களுக்கு தேவையான பகுதியை மாத்திரம் படித்துக்கொள்ளலாம்.**

**தொடர்புகளுக்கு: பிரபா Tel: 07749 051 394**

**Perma**

*International Shipping Ltd*

*Shipping & Airfreight Worldwide Destinations*
*Traveling & Ticketing*
*Import & Export*
*Packing & Crating*
*Collection & Delivery*
*All sizes &Weights*
*Immediate & Insurance Cover*
*Complete Documentation Service*

- இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூருக்கு விசேட கழிவு
- ஏற்றுமதி
- இறக்குமதி
- களஞ்சியப்படுத்துதல்
- ஒழுங்குகள் செய்தல் யாவற்றிற்கும்

திறந்த **Car Park**
பிரமாண்டமான களஞ்சியம்

உங்கள் பொருட்களை இங்கு வந்தும் Pack செய்துகொள்ளும் வசதி உண்டு
உங்கள் இல்லம் வந்து Collcect செய்யும் சேவை உண்டு

- உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள்
- வாகனங்கள்
- வீட்டுப் பாவனைப்பொருட்கள்
- இயந்திர உபகரணங்கள்

**Over 35 Years Experience**

**Door to Door or Door to port service**

**Web: www.permainternational.co.uk**
**E-mail: info@ permainternational.co.uk**

*COLLECTION POINTS*
* Milton Keynes
* North London
* East London

**இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்**

**தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ பொருட்களை அனுப்ப விரும்புகிறீர்களா? தரமான, பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்**

**தொடர்புகளுக்கு............ மோகன், பேர்சி, சிவம்**

**45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL**
**Tel: 020 8646 5222, Fax: 020 8646 5557, Mobile: 07939550397**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் நாக. பத்மநாதன்
# 6-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர் உயர்.திரு நாக பத்மநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் பிறந்து புங்குடுதீவில் மணம் புரிந்து தமிழ் வளர்ச்சிப் பணிகளிலும் சமயப்பணிகளிலும் பொதுப் பணிகளிலும் தன்னையும் குடும்பத்தையும் இணைத்து வாழ்ந்தவர். சிந்தையும் செயலும் மாறுபடாது ஒருங்கிசைந்து அறவழியில் அன்பால் அனைத்தையும் அரவணைத்து அல்லலை அவலத்தை அகற்றிட அயராது பணிபுரிவதை தனது அணிகலனாக கொண்ட ஒரு நாட்டுப்பற்றாளர். அமரரின் நினைவுநாள் பங்குனி 4ம் நாள் நினைவுகூரப்பட்டது.

அவரது மறைவின்போது உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சாற்றிய கவிதாஞ்சலி இங்கே நினைவுகூருகிறோம்.

## நாக. பத்மநாதனை இழந்தோம்



நாக பத்ம நாதனை இழந்தோம்!

எந்த உயிரிலும் உயிரிலாப் பொருளிலும்
இலக்கியம் காணும் இணையிலாப் புலவன்!
சிந்தனைக் கடல் முழ்கிச் செந்தமிழ்
சிலிர்க்க உருவகக் கதைகள் செய்தவன்!
இந்த நாள் இங்கிருந்த புலவரில்
'இவன் தனி' என வாழ்ந்து போவேன்!
நந்தமிழ் எழத் துலகின் நாயகன்
நாக பத்ம நாதனை இழந்தோம்!

நீளும் ஈழ விடுதலைப் போரில்
நெருப்பின் நடுவில் நின்ற புலிகளின்
தோளும் நெஞ்சும் மகிழ அவரொடும்
தொல்லை ஆயிரம் நின்ற காட்டிடை
தேளும் பாம்பும் நின்ற காலையும்
தேடித் தேடி அத் தீரர் போரில்
நாளும் துணையாய் நின்ற நற் றமிழன்
நாக பத்ம நாதனை இழந்தோம்!

சொல்லால் செயலால் தமிழர்க் குழைத்த
சொந்தம் மறவாத் தமிழனைத் இழந்தோம்!
கல்லாய் மரமாய் வாழ்ந்தோர் இடையே
கனலாய் வாழ்ந்த தமிழனை இழந்தோம்!
பொல்லார் தமிழரை ஒடுக்கிய போழ்தில்
பொங்கி வெடித்த தமிழனை இழந்தோம்!
நல்லான் ஒருவனை வல்லான் ஒருவனை
நாக பத்ம நாதனை இழந்தோம்!

பெற்ற தாய்த் தமிழைப் பேணி வாழத்தவனை
பீடு தமிழ் பெற நீடுழைத் தவனை
உற்ற தன் இனம் ஓம்பி நின்றவனை
'உறவு தமிழினம்' என உரைத்தவனை
பற்றடா தாய் மண் பற்றை என்றவனை
பணியா விடுதலை மண்பணியாளனை
நற்றமிழ் ஈழம் பெற்ற மா மணியை
நாக பத்ம நாதனை இழந்தோம்!

வெறுக்க எழுதுவார் இலக்கியம் சில்லோர்
வேற்று நாட்டார் படைக்கும் இலக்கியம்
பொறுக்கி எழுதுவார் சில்லோர் இங்கே
புழுதி இலக்கியம் எழுதுவார் சில்லோர்
சிறக்க இலக்கியம் எழுதும் ஆற்றலன்
சிந்தனைச் சிற்பி எழுத்தின் செம்மல்
நறுக் கென் றெழுதும் நற்றமிழ் மேதை

## இல்லாத ஒன்றை

இல்லாத ஒன்றைத் தேடி
நில்லாத உலகில் ஓடி
செல்லாத இடங்கள் நாடி
கல்லாத பாடம் கற்றோம்

பொல்லாத எண்ணம் பெருகி
பொன்னான பொழுதை இழந்து
பொருந்தாத வேடம் புனைந்து
புதிதாக எதனைக் கண்டோம்

சொல்லாத எண்ணம் கோடி
சொன்னாலும் கேட்போர் இன்றி
புதைக்கின்றோம் நெஞ்சினுள் மூடி
புரியாதோ வாழ்வின் மந்திரம்

கொல்லாத உணர்வின் ஏக்கம்
கொள்கின்ற நிஜத்தில் மறையும்
கூட்டியும் கழித்தும் பார்க்கும் கணக்கு
சரியாய் முடியுது எரியும் சிதையில்

-சக்தி சக்திதாசன்

## யாழ்.மாவட்ட எம்.பியாக சிறில் பதவியேற்பு

புதிய எம்.பிக்களாக இரண்டுபேர் நேற்று நாடாளுமன்றில் சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம்.லொக்குபண்டாரவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப் பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சிவநேசனின் இடத்திற்கு யாழ். மாவட்டத்தில் விருப்பு வாக்குகளின் அடிப் படையில் அடுத்த நிலையில் இருக்கும் சொலமன் சூ. சிறிலும் எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் கக்கீமின் இடத்திற்குத் திகாமடுல் லத் தேர்தல் தொகுதியில் விருப்பு வாக்கு களின் அடிப்படையில் அடுத்து முன்னணி யில் இருக்கும் முகமட் நௌ'ாத்தும் நேற்றுப் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி யேற்றனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் தலைமையில் கூடிய போது முதலில் நௌசாத்தும் அடுத்து சிறிலும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இரண்டு எம்.பிகளுக்கும் எதிர்க்கட்சி உறுப் பினர்கள் கைலாகு கொடுத்துப் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5 பேர் வீதி விபத்துக்களில் காயம் அவர்களில் 18 பேர் உயிரிழந்தனர்

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 560 பேர் வீதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இத்தகவல் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் அதன் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை ஆகியவற்றி லிருந்து திரட்டிய புள்ளி விவரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

வீதி விபத்துக்களினால் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யில் 79 பேரும், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் 64 பேரும், சாவகச் சேரி மாவட்ட வைத்தியசாலையில் 47 பேரும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத் தியசாலையில் 20 பேரும், சுற்றயல்கூறு அச்சுவேலி வைத்திய சாலையில் 14 பேரும், சுற்றயல்கூறு கோப் பாய் வைத்தியசாலையில் 14 பேரும், மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவில் 7பேரும், மாவட்ட வைத்திய சாலை ஊர்காவற்றுறையில் 4 பேரும், சுற்றயல்கூறு காரைநகர் வைத்தியசாலையில் 2 பேரும், சுற்றயல்கூறு சங்கானை வைத்தியசாலையில் ஒருவரும், வேலணை கிராம வைத்தியசாலையில் ஒருவரும் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டு காலப்பகுதியில் வீதி விபத் தினால் பாதிக்கப்பட்டு 307 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 18 பேர் உயிரி ழந்துள்ளனர் எனவும் இப்புள்ளி விவரக் குறிப்புக்கள் தெரிவித்தன.

# கிளிநொச்சியில் இருந்து தெற்குக்கு 5,000 மெற்றிக் தொன் அரிசி

கிளிநொச்சியில் இருப்பில் உள்ள 5 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை தென்னி லங்கைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாய கன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித் தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியை வவுனியா ஊடாக வர்த்தக அமைச்சுக்கு அனுப்பிவந்தோம். ஆனால் கடந்த சில மாதங்களாக அப்பணி நிறுத்தப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலப் பகுதியில் கிளிநொச்சி மற்றும் வன்னி மாவட்டங்களில் தொடர்ந்து பெருமழை பெய்தது. அதனால் நெல் அறுவடையில் பலத்த வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்த்தே தெற்கே அரிசி அனுப்புவது நிறுத்தப்பட்டி ருந்தது. இந்தப் பணி மீண்டும் ஆரம்பிக்கப் பட உள்ளது.

இப்போது கையிருப்பில் உள்ள அரிசியில் 5 ஆயிரம் மெற்றிக் தொன்களை வவு னியா வில் வைத்து வர்த்தக அமைச்சிடம் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்

தற்சமயம் கிளிநொச்சியில் உள்ள குளங் களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், விவசாயி கள் சிறுபோக நெற்செய்கையில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அரச அதிபர் மேலும் தகவல் தெரிவித்தார்.

# தலையணை ரகசியம்!

தலையணையைப் பற்றி பிரிட்டனில் ஒரு ஆராய்ச்சி நடத்தினார்கள். அதில் தலையணையை உயரமாக வைத்தாலும் பிரச்சினை... தலை லயணையை தாழ்த்தி வைத்தாலும் பிரச்சினை... தூக்கம் தடைபடும் என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.



தலையணையை உயரமாக வைக்கும்போது... தலை, நெஞ்சோடு ஒட்டி விடுகிறது. உயரம் குறையும்போது தலை பின்னோக்கி விடுகிறது. இதனால் கழுத்து எலும்பு அதாவது முதுகுத் தண்டு எலும்பின் மேல்பகுதியில் அழுத்தம் அடைகிறது. அதுமட்டுமின்றி, தலையணை உயரம் சரியில்லாமல் இருக்கும்போது மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படவும் செய்தது.

மேலும் குறட்டையும் வருகிறது. பக்கத்தில் படுத்திருப்பவர்களுக்கு தொந்தரவு தருவதோடு குறட்டை விடுபவருக்கும் சுவாசத் தடை ஏற்படுகிறது. சுவாசத் தடையின் காரணமாக அடிக்கடி விழிப்பும் ஏற்படும்.

தலையணை மென்மையாகவோ அல்லது கடினமாகவோ இருக்கக் கூடாது. நடுத்தரமாக தலையணை இருப்பதே நல்லது. சரியான விதத்தில் தலையணை இருக்கும் பட்சத்தில் தலை மட்டுமல்ல, தலையின் பின்பகுதியும் சரியாக பொருந்தி இருக்கும்!

இது குறித்த ஆய்வும் தற்போது நடந்து வருகின்றன. நாம் நிற்கும்போது நமது தலைக்கும் நெஞ்சுக்கும் என்ன இடைவெளி உள்ளதோ... அதே இடைவெளி படுத்து தூங்கும்போதும் இருக்க வேண்டும். இதுகுறித்தும் வட இங்கிலாந்தில் நோர்விச் பல்கலைக் கழக மருத்துவமனையில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.


MARKANDAN & UDDIN SOLICITORS
Solicitors & Administrators for Oath

Tamil House, 720 Romford Road, London E12 6BT

**விவாக விண்ணப்பம்**

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிரும்பின் உள்துறை அமைப்பின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்

**அகதி விண்ணப்பம்**

14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிடத்தன்மை விண்ணப்பங்கள் பிரஜாயுரிமை விண்ணப்பத்திற்காக ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்பந்தமான ஆலோசனைகள்


விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்களை No win no fee அடிப்படையில்

**Tel: 020 8514 8300 / 07230 285 634,**
**Fax: 020 8514 8381**

**Markandan 07956 386 576 Uddin: 07957 455 670**


# வங்கி வைப்பகத்தில் கறையான்களின் கைவரிசை

நம்ப முடியவில்லை. ஆனால் உண்மைக் கதையிது. மிகமிகப் பாதுகாப்பான இடம் என்று நாம் கருதும், வங்கியொன்றின் வைப்பகம், அதன் வாடிக்கையாளர் ஒருவரின் காலைவாரியிருக்கின்றது. வங்கியொன்றின் வைப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த பணக்கட்டுக்



களையும், முதலீட்டுப் பத்திரங்களையும், கறையான்கள் அரித்து, இந்திய வர்த்தகர் ஒருவரை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கின்றன. அவர் பெயர் திவாரிகா பிரசாத். பணமாக 450,000 இந்திய ரூபாய்களையும், 232,000 ரூபாய் பெறுமதி யான முதலீட்டுப் பத்திரங்களையும், தங்கம், வெள்ளிகளாலான சில நகைகளையும் இவர் வைப்பகத்தில் வைத்திருந்தார். ஊநவெசயட டீயமெ ழக ஐனெயை என்றழைக்கப்படும் அரச மத்திய வங்கியில்தான், இவர் வைப்பகமொன்றை எடுத்திருந்தார். தனது மனைவியோடும் பிள்ளைகளோடும் உறவு முறிந்துவிட்ட நிலையில், தனது பாதுகாப்பிற்கு, வங்கியின் வைப்பகமொன்றை நாடியிருந்தார். கறையான்கள் தொல்லை பற்றி தாம் வாடிக்கையாளர்களுக்கு நேரத்தோடு அறிவித்தல் கொடுத்தோம் என்று வங்கி கூறுவது சரியாக இருந்தாலும், இந்த அறிவித்தல், தனிப்பட்ட விதத்தில் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப் படவில்லை என்பதை வங்கி அதிகாரிகள் ஒத்துக் கொள்கின்றார்கள். பல மாதங்களாக வங்கியின் பக்கமே செல்லாதிருந்த தனக்கு, இந்த அறிவித்தல் பற்றி எதையும் அறிய வாய்ப்பிருக்கவில்லை என்கிறார் இந்த வர்த்தகர். வைப்பகத்தின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்தால்தான், வங்கி இழப்புகளைப் பொறுப்பேற்போம். கறையான்கள் அரித்தமைக்கு எம்மால் பொறுப்பெடுக்க முடியாது என்று கையை விரிக்கின்றது வங்கி. எப்படி இருக்கின்றது அவர்கள் நியாயம்? (அநியாயம்) ?


EVEREST CURRY KING



**சுத்தம், சுவை, தரம்**

**இவைகளுக்கு மறுபெயர் எவரெஸ்ட்...**

**நண்டு, இறால், கணவாய், சுறா, மீன், நெத்தலி போன்ற கடல் உணவுகளை பல சுவையில் சுவைத்து மகிழ்ந்திட..**

**24 Loampit Vale**
**Lewisham**
**Tel : 020 8691 2233**



KNC School of Motoring

★ DSA Approved Driving Instructors with more than 20 years experience.
★ PASSPLUS registered Instructors.
★ New Drivers save £'s with Car Insurances.
★ Motorway Lessons.
★ All the Instructors are members of the Association of Driving Instructors and Road Safety Officers of Haringay

தமிழரால் தமிழில் தமிழர்களுக்கு ஓட்டுனர் பயிற்சி

உங்கள் *Theory Test and Hazard Perception Test*
ஆகிய இரண்டும் தமிழில் கணனி மூலம் பயிற்சி வழங்கப்படும்
*Practical Test* தமிழில் தரமான முறையில் பயிற்றுவிக்கப்படும்

Area Covered West London.
Please contact Patrick:
**Tel: 07956 387386, 020 8864 9329,**
**Fax : 020 8423 0403**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்கற்கும் மாணவர் பக்கம் வாசகர் போட்டி

**பிள்ளைகளின் தமிழ் மொழி, தமிழ்த் தாயகஉணர்வு, பண்பாடு ஆகியவற்றை வளர்க்கக் கூடிய போட்டிகள், கட்டுரைகள், கவிதைகள் என்பனவற்றை இப்பத்திரிகை வரவேற்கின்றது.**

## சொற்களைத் தேடுதல்

கீழுள்ள எழுத்து வலையில் 64 சொற்கள் பின்னப்பட்டுள்ளன. இவை மேலிருந்து கீழ், கீழிருந்துமேல் , இடமிருந்து வலம், வலமிருந்து இடம் மூலைப்பக்கம் என நேர்கோட்டில் அமையும். நீங்கள் இவற்றைக் கண்டுபிடித்து வளையமிட்டுக் காட்டவும் .

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ம் | ண | வா | தூ | டி | பு | கா | ர் | ட | ஞா | ய | மு | ஐ | அ |
| டை | மு | ள | ல் | றி | ளி | மு | வ | ளி | வ | ஆ | யி | ன் | டி | ப |
| ம | கோ | ன | ள் | வா | கு | தி | தை | னை | ரா | கா | ற் | று | ம | த் |
| ழை | ன் | க | ன | வெ | ங் | று | ஒ | ரு | றி | ய | வ | டு | னை | து |
| மி | ங் | ம் | வ | கு | ப | பி | ன் | நே | ர | ம் | வு | து | வை | சி |
| தி | சை | ம | தி | பு | னி | ப | ப | ஒ | வு | த | த் | மு | கா | று |
| ச | கு | சா | மு | டா | மு | கை | து | னி | ரை | ஐ | ப் | ப | சி | டி |
| ம் | க | க் | ழ | மு | ட் | றி | ம | த் | தா | ர | ம் | பு | ஆ | மு |
| பு | க | ட | ப | வெ | ட | ர | ப் | தி | றி | அ | ஐ | ய | கி | தே |
| ம் | த | ஆ | ல் | னி | ம் | ன் | பு | ம் | ய | ழி | க | ல் | ரை | கு |
| வி | னி | ன் | மி | ர | மு | டு | வெ | டை | னி | ம் | க | தி | ளி | ன் |
| ய் | யா | ங் | ணா | மா | சி | அ | ள் | ச | கை | தி | த | ர் | கா | நா |
| வா | தி | ழ | ப | று | றி | ஆ | ளி | ஆ | ளு | சி | ஏ | டு | மா | ர |
| ல் | டி | லை | ன் | க | தூ | ற | ல் | மா | று | மு | லை | மா | ட் | ம் |
| செ | கா | கை | தூ | ஓ | ல் | வ | ற | ரி | ன் | ப | மா | வெ | டு | எ |

| | | | |
|---|---|---|---|
| ஆறு | மந்தாரம் | தூவாணம் | பனி |
| மப்பு | வானம் | சித்திரை | முகில் |
| பருவம் | முழக்கம் | புகார் | ஐப்பசி |
| சாமம் | மின்னல் | தரை | மூன்று |
| வெள்ளம் | கார்த்திகை | ஐந்து | புதன் |
| மார்கழி | கடல் | நான்கு | வைகாசி |
| திங்கள் | புழுதி | ஆவணி | ஞாயிறு |
| செவ்வாய் | இடி | வெள்ளி | வியாழன் |
| திசை | கோடை | பனிமூட்டம் | மாசி |
| புயல் | ஒன்று | இரண்டு | ஆடி |
| காற்று | புரட்டாதி | காரானை | ஆனி |
| இரவு | புழுக்கம் | சூரியம் | சனி |
| பங்குனி | ஆகாயம் | அடைமழை | தை |
| ஒன்பது | மதியம் | குளிர் | பின்நேரம் |
| தூறல் | மாரி | காலை | மாலை |
| பகல் | பத்து | எட்டு | ஏழு |

**பெயர்:** Write in Tamil ..............................................................................

**முகவரி:** Write in English ........................................................................

........................................... **தபாற் குறியீடு:**...........................................

**தொலைபேசி:**.......................................................................................

இம்மாத சொற்களைத் தேடுதல் போட்டியின் விடைகள் எமது அடுத்தமாத வடலியில் பிரசுரிக்கப்படும். போட்டியாளர்களில் இருவர் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வடலியில் வெளிவரும்.


அத்துடன் இவ்விருவருக்கும் **Everest Curry King, Lewisham** ஸ்தாபனத்தார் தலா 10 பவுண் வவுச்சர்களை வழங்க உள்ளனர்.

இப் போட்டிக்கான விடைகள் இம் மாதம் **20ம் திகதிக்கு** முன் கிடைக்கும் படியாக கீழுள்ள முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

**Vadalee, PO box- 24783, London, SE13 7YE**

*சிறுவர்கள் தங்களின் தமிழ் அறிவை வளர்த்துக்கொள்ள இது உதவியாக இருக்கும் எனும் நோக்கில் ஆக்கப்பட்டுள்ளது. எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இப் போட்டிகளைச் செய்யுமாறு ஊக்கப்படுத்துங்கள், உதவவேண்டாம்.*

## குறுக்கெழுத்துப் போட்டி – 83




இம்மாத போட்டியின் விடைகள் எமது அடுத்தமாத வடலியில் பிரசுரிக்கப்படும். போட்டியாளர்களில் இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வடலியில் வெளிவரும்.

அத்துடன் இவ்விருவருக்கும் **Everest Curry King Lewisham** ஸ்தாபனத்தினர் தலா 10 பவுண் வவுச்சர்களை வழங்க உள்ளனர்

**பெயர்:** Write in Tamil ..............................................................................

**முகவரி:** Write in English ........................................................................

........................................... **தபாற் குறியீடு:**...........................................

**தொலைபேசி:**.......................................................................................

*கீழ்கண்ட குறிப்புக்களைக் கொண்டு காலியாகவுள்ள இடங்களை சரியான சொற்களால் நிரப்பி அனுப்புங்கள். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. சரியாக நிரப்பி அனுப்பும் வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்வுசெய்து இருவர் தலா 10 பவுண் வவுச்சர்கள் பரிசாக அளிக்கப்படும்.*

### இடமிருந்து வலம்

1. கடல் அடியில் பூகம்பம் காரணமாக அதிர்வு ஏற்படுவதால் அலைகளின் வேகம் அதிகரிக்கப்பட்டு பின் அது கரையோரங்களில் பேரலையாக மாறி அனர்த்தங்களை ஏற்படுத்துகிறது.
7. மையப்புள்ளியில் இருந்து எல்லாப் பக்கங்களிலும் சம துாரத்தில் வளைவான கோட்டால் அமையப்பெற்ற வடிவம்
8. உறுதியானது, சுலபமாக முடியாதது, அதிகப்படியான முயற்சி வேண்டுவது என பொருள்படக்கூடியது. இங்கே குழம்பி உள்ளது.
11. நேர்கோணங்களில் ஒத்த அளவினைக் கொண்டிருக்கும் நான்கு பக்கங்களைக் கொண்ட வடிவம்
16. உணவுக்கு பயன்படுத்தும் வாசனைத் திரவியங்களில் ஒன்று

### மேலிருந்து கீழ்

1. முச்சங்கங்களில் ஒன்றான இடைச்சங்கம் அமைந்திருந்த இடம்
2. ஆண்டின் வெப்பம் மிகுந்த காலம்
3. ஓலை, பனைமட்டை, பட்டை போன்றவற்றால் செய்யப்பட்ட ஒரு மறைப்பாகப் பயன்படுத்தும் ஒரு தடுப்பு
5. சவ்வரிசி, சேமியா போன்றவற்றை பாலுடன் கலந்து இனிப்பு சுவையுடன் செய்யும் திரவம்
6. கடுமையான வெப்பம் நிறைந்த நீண்ட மணல்வெளி
8. சிறியது பாடசாலை ஆனால் பெரியது?
9. இதை 'முச்சு' என்று கூறலாம்
13. திறந்த வெளி இடம்
14. வழிபடும் இடம்

### வலமிருந்து இடம்

3. கதை, கட்டுரை போன்றவற்றில் தரப்படும் பொருள் அடிப்படையிலான பெயர்.
5. பெண்களின் ஆடைகளின் ஒன்று.
9. 'துறைமுக அலை' என யப்பானிய மொழியில் அழைக்கப்படும் பேரலை
10. பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படாமல் கிடக்கும் நிலம்
15. குழந்தை பெறும் நிலை அல்லது காப்பம் எனக் கூறலாம்

### கீழிருந்து மேல்

4. மனுக்குலத்தின் முதற் பெண் என அழைக்கப்படுபவர்.
12. இது துளை, வாயில் (ஓட்டை) எனக் பொருள்படும்
16. அடிப்படையாக ஒருவர் ஆற்றவேண்டிய பணியை இவ்வாறு கூறலாம்

(கடந்த போட்டி முடிவுகள் 14ஆம் பக்கத்தில்)

## அக்காலத்து .... (3ம் பக்க தொடர்ச்சி)

அந்தக் காலத்தை நினைத்துப் பார்த்தால் இப்போது மக்களின் 'வாழ்க்கைத்தரம்' மிகவும் உயர்ந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் இன்றைக்கும் மற்றைய பல நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாங்கள் மிகவும் கீழே தான் இருக்கிறோம். (இன்றைய போர்க்காலச் சூழ் நிலையில் நாங்கள் நூறு ஆண்டுகளுக்கு மேல் பின்னேறிவிட்டோமென்பது வேறு விடயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக.... (4ம் பக்க தொடர்ச்சி)

தீவுக்கு அப்பாலுள்ள கச்சதீவு காட்டப்படவில்லை.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அரேபியர்களும், ஐரோப்பியர்களும் வணிகம் செய்ய இலங்கைக்கு வந்தபடி இருந்தனர். அவர்களைத் தொடர்ந்து வந்த தொலமி, பிளினி ஆகியோர் இலங்கையின் கடற்பகுதி மற்றும் உட்பகுதிகளைத் தேசப்படங்களாக வரைந்தனர். அவர்கள் வரைந்த இலங்கை தேசப்படத்தில் கச்சதீவு குறிப்பிடப்படவில்லை.

இராமநாதபுரம் மன்னருக்கு உரிமையுடைய கச்சதீவு, ஆங்கில இந்திய அரசோடு இராமநாதபுரம் சமஸ்தானம் இணைந்தபோது இந்தியாவோடு சேர்ந்துவிட்டது.

1974 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திரா காந்தி - சிறிமாவோ பண்டார நாயக ஒப்பந்தத்தின்படி கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமாக ஆக்கப்பட்டது.

அதன் பின்னர் இருநாடுகளின் அதிகாரிகளுக்கு இடையே மீன் பிடிக்கும் உரிமை பற்றி கடிதப் போக்குவரத்து நடந்தது. இந்தக் கடிதங்களே 1976 ஒப்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் முதல் ஒப்பந்தத்தில் அளிக்கப்பட்ட உரிமைகளும் பறிக்கப்பட்டன.

இலங்கையின் இனக்கலவரம் உள்நாட்டுப் போராக உருவெடுத்ததும், இந்திய - இலங்கை கடல்வழிப் பாதை முக்கியத்துவம் பெற்றது.

இலங்கை தமிழ் அகதிகள் வருகை, போராளிகளுக்கு ஆயுத உதவி எனக் காரணம் காட்டி இலங்கை கடற்படை முடுக்கி விடப்பட்டுள்ளது. இதனால் கடுமையாகப் பாதிக்கப்படுபவை தமிழக மீனவர்களின் தொழிலும், வாழ்வும்.

தமிழக மீனவர்களின் நலனைக் காக்க கச்சதீவை மீட்போம்- என்ற முழக்கத்தை அப்போது ஆட்சியில் இருந்த அ.தி.மு.க.அரசு முன் வைத்தது. 1991 ஆம் ஆண்டு சுதந்திர நாளை முன்னிட்டு கோட்டையில் கொடியேற்றிய அப்போதைய முதல்வர் ஜெயலலிதா "கச்சதீவை மீட்போம்" என்று சூளுரைத்தார்.

1991 அக்டோபர் 4 அன்று சட்டப்பேரவையில் கச்சதீவை இலங்கை அரசிடம் இருந்து மீட்க கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆளுநர் உரையிலும் அறிவிக்கப்பட்டது.

இப்போது தமிழக முதல்வர், பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார். சர்வதேசக் கடல் எல்லையைக் கடந்து செல்ல வேண்டாம் என்று மீனவர்களுக்கு எச்சரிக்கப்பட்டு வருகிறது.

எனினும் கச்சதீவுக்கு அருகில் ஏராளமான மீன்கள் கிடைக்கின்றன என்பதால் செல்கிறார்கள். கச்சதீவு நீண்ட காலத்துக்கு முன் தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி பகுதியாக இருந்து வந்துள்ளது என அதில் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றுக் காலம் தொட்டு தமிழக மீனவர்களின் தாய் வீடாக இருந்து வரும் கச்சத்தீவை மீட்க வேண்டும் அல்லது 1974 ஒப்பந்த விதிகளின்படி மீன் பிடிப்பதற்கான உரிமைகளை யாவது பெற்றுத் தர வேண்டும்.

தமிழக அரசு இனிமேலும் கால தாமதம் செய்யக் கூடாது. தாமதம் மனித உயிர்களையே மலிவாக்கி விடும்.

நன்றி - தினமணி

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

*இளமையும் அழகும் இனிமைசேர்க்க*
*இன்தமிழ் அவற்றின் எழிலைப்பாட*
*களமுனையோடு கவர்ச்சிகொண்டு*
*காலத்தின் பதிவுகளைத் தாங்கி வரும்*
*வடலியை வரைந்தெடுக்கும் கைகளுக்கும்*
*வண்ணத்தமிழ் கவிவர்ணத் தூரிகையால்*
*எண்ணங்களாய் எழுத்துக்களாய் இதிலடக்கி*
*இதயங்கள் மகிழவரும் புத்தாண்டிலே*
*வண்ணமுற வாழ்த்துக்களை கொத்துமலராய்*
*வாரிவந்து வாழ்த்துகின்றேன் வாழி வாழி*

*வாக்கோடு வாழ்வு பெருக மனை சிறக்க*
*பூக்களை ஆரத்தில் வாழ்த்துக்களாய்*
*புத்தாண்டின் வரவிற்கு முத்துக்களாய்*
*ஆக்கமும் அறிவும் அகத்தெழுந்து*
*அகிலத்தில் சாதனைகள் படைக்கும் வண்ணம்*
*நோக்கமும் வாழ்வுமாய் இணைந்த உங்கள்*
*நுட்பமிகு வாழ்வு மீண்டும் வளம் கொழிக்க*
*காக்கும் கருணைக்கடல் அருள் பொழிய*
*காலமெலாம் வாழ்க*

**- வேணுகோபாலன்**

# வன்னிப் பகுதி ஆஸ்பத்திரிகளில் சாதாரண மருந்து தானும் இல்லை! அவை பெரும் நெருக்கடிக்குள் என்கிறது ஐ.சி.ஆர்.சி.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வன்னிப் பிரதேசத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் பரசெற்றமோல், அன்ரி பயற்றிக்ஸ், தடுப்பூசி மருந்துகள் ஆகிய சாதா ரண அடிப்படை மருந்துகள் கூட இல்லாத பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

வன்னிப் பிரதேச ஆஸ்பத்திரிகளுக்கு சுகாதார அமைச்சு ஒழுங்காக போதிய மருந்து வகை களை அனுப்பிவைக்காமையினாலேயே இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

செஞ்சிவைச் சர்வதேசக்குழு (ஐ.சி. ஆர்.சி.) சித்திரை 17ம் திகதி விடுத்த தனது பிந்திய அறிக்கையில் வன்னிப் பிரதேச ஆஸ்பத்திரிகள் மற்றும் வைத்தியநிலையங்கள் எதிர்நோக்கும் சவால்களை வெளிப்படுத்தியுள்ளது. அந்த அறிக்கையிலேயே இந்த கஷ்ட நிலை எடுத்துக் கூறப் பட்டுள்ளது.

சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவின் பிந்திய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது

நாளந்த செயற்பாடுகளை மேற் கொள்ளவும் போரினால் பாதிக்கப் பட்டோருக்கு சிகிச்சை அளிப்பதற்கும் வைத்தியசாலைகளில் பெரும் ஆளணித் தட்டுப்பாடு நிலவுகிறது.

சர்வதேச மனிதநேய சட்டத்தின்படி ஆயுத மோதல் நிலைமைகளில் நோய் வாய்பட்ட, காயமடைந்த பொதுமக்கள் மற்றும் போரில் ஈடுபடுவோருக்குத் தேவை யான சிகிச்சைகள் உடனடியாக வழங்கப் படவேண்டும்.

இப்பிரதேசத்தில் உள்ள வைத்தய சாலைகளில் நாளாந்த, சாதாரண செயற் பாடுகளை மேற்கொள் வதற்கே பெரும் ஆளணிப்பற்றாக் குறை நிலவுகிறது. இந் நிலையில் மோதல்களில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உடனடி சிகிச்சை யளிப்பதில் பிரதேச வைத்திய சாலைகளில் பெரும் பிரச்சினைகள் காணப்படுகிறன.

இலங்கைச் சுகாதார அமைச்சுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை யின்படி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வடக்கு, கிழக்கில் பல மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்களையும் விநியோகங் களையும் வழங்கி வருகின்றது. மேலும் முருங்கன் மருத்துவ மனைக்கு முறிந்த அவயவங்களை சரிசெய்வதற்கான உபகரணங் களையும் வழங்கி வருகின்றது.

குடாநாட்டில் சுகாதார வசதிகள் பெறமுடியாத நிலை யாழ். குடாநாட்டு மக்கள் அங்கு சில வகை சுகாதார வசதிகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

எனினும் அவர்களுக்கு அவசியமான சுகாதார வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து நோயாளிகளை வாரம் இரு தடவைகள் விமானம் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கொழும்புக்கு அழைத்து வருகின்றது.

மார்ச் மாதத்தில் விசேட சத்திர சிகிச்சைகள், பரிசோதனைகள் அவசியமாகக் காணப்பட்ட 54 நோயாளிகள் செஞ்சிலு வைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர்.

மேலும் அவசியமான மருத்துவ உபகர ணங்களும் விமானம் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## இவர்கள் புனிதர்கள்

**தத்துவம் பத்துமே சொத்தெனக் கூறிடும்**
**வித்தகம் பெற்றவர் புத்தகம் வாங்கிட**
**உத்தரம் போட்டவர் பத்து நாள் என்றவர்**
**சத்திரம் போவென வக்கிரம் பேசுறார்.**

**வட்டியும் வாங்குறார் வங்கியில் போடுறார்**
**கிட்டிடும் நகையினைக் கிண்டியே தாழ்க்கிறார்**
**சட்டியும் பானையும் அடுப்பிலே வைத்திரார்**
**தட்டியும் கேட்டபோது விரதமும் என்கிறார்.**

**வேட்டியும் சால்வையும் வெள்ளையாய் போடுறார்**
**பாட்டியின் சொத்திலும் பாதியைக் கேட்கிறார்**
**நீட்டியும் அகட்டியும் பரம்பரை பேசுறார்**
**நீட்டிடின் பணமதை குப்பையும் அள்ளுவார்.**

**குங்குமப் பொட்டுடன் கோயிலும் நாடுவார்**
**சங்குகள் ஊதியே சாதமும் வாங்குவார்**
**கும்பிடும் சாமிக்கே நாமமும் போடுவார்**
**உண்டியல் போட்டதை நாளிலும் கண்டிரார்.**

**படித்தவர் போலவே பாவமும் காட்டுவார்**
**எடுத்தவர் பிந்தினால் எரிமலை ஆகுறார்**
**முடித்தவர் என்பதால் முற்பணம் கேட்கிறார்**
**வடித்தவர் வார்த்தைகள் தியாகிபோல் காட்டுறார்.**

**ஊரது போய்வர உண்மையில் விரும்புறார்**
**பேரெது கொடுத்தது பட்டியல் கண்டிரார்**
**சீரெது சிறப்பெது செய்திகள் அனுப்புறார்**
**ஈதொரு பயத்தினால் போவதை வெறுக்கிறார்.**

த.சு.மணியம்


# RADIUS SERVICE LTD

For Sales, Service and Repairs of Commercial Refrigeration & Air-Conditioning

**உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை, மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்**



- Shelving
- Chillers, Freezers
- Air Conditioning systems
- Shop Fitting
- Cold rooms etc.

* Remote Dairy Low Fronted
* Plug in Dairy
* Double Door Chillers
* Jumbo Freezers








**Unit: 23-24 Resolution Way**
**London, SE8 4NT**
**Tel: 020 8692 0257 / 020 8694 2786**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பமடைவதால் உணவுப் பஞ்சம் ஏற்படும்: ஐ.நா. மையம் எச்சரிக்கை

புவி வெப்பமடைவதால் உலகின் பெரும்பாலான பகுதிகளில் கடுமையான வறட்சி ஏற்படும். இதனால் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் குறைப்பு மையம் எச்சரித்துள்ளது. வறட்சியைச் சமாளிக்க மேற்கொள்ள




வேண்டிய நடவடிக்கைகளை பல நாடுகள் இப்போதிருந்தே எடுக்க வேண்டியது கட்டாயமாகும். இல்லையெனில் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்படும்.

வறட்சி மற்றும் நீராதாரத்தை திறம்பட நிர்வகிக்காதது உள்ளிட்ட பிரச்னைகள் உணவுப் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் முக்கியக் காரணிகளாகும். இதிலும் குறிப்பாக வறட்சியை சமாளிக்க நீண்ட கால அடிப்படையிலான தொலைநோக்கு திட்டங்களை உருவாக்க வேண்டும்.
புவி வெப்பமடைவதால் ஏற்படும் பாதக அம்சங்கள் குறித்து ஆராய ஐக்கிய நாடுகள் சபை ஒரு குழுவை அமைத்துள்ளது. மனிதத் தவறுகளால் மிக மோசமான வறட்சி ஏற்படும் சூழல் உருவாகியுள்ளதாக இக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் சில பகுதிகளில் கடுமையான மழை பெய்வதற்கான சூழலும் உருவாகியிருப்பதைக் கண்டறிந்துள்ளது.
வறட்சியை சமாளிக்கக் கூடிய விதைகளை, தானியங்களை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று இந்தக் குழுவின் தலைவர் சால்வனோ பிரிகோ அறிவுறுத்தியுள்ளார்.
இந்த விடயத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கொள்கை மாற்றம் கொண்டு வர வேண்டியது மிகவும் அவசியம். மேலும் வந்தபிறகு நடவடிக்கை எடுப்பதை விட வருமுன் காப்பதே சிறந்தது. எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறைக்கு எந்த அளவுக்கு புவி வெப்பமடையும் விடயம் காரணமாக இருக்கும் என்பதை உணர வேண்டும்.

இந்த நூற்றாண்டின் இறுதியில் உலகில் 100 கோடிக்கும் அதிகமான மக்கள் கடுமையான குடிநீர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. புவியின் சுற்றுச் சூழலை பாதிக்கும் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்காத வரை இந்தப் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படாது.
புவி வெப்பமாதல் சூழலைச் சமாளிக்க நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து பேரிடர் மேலாண்மை நிர்வாகத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும். இதன் மூலமே வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை போன்றவற்றைச் சமாளிக்க முடியும் என சுட்டிக் காட்டியுள்ளது.


கற்பகம்

மக்கள் மனங்கவர்ந்த தமிழ்க் கடை

☆ Fresh இறைச்சி எப்பொழுதும் கிடைக்கும். பெரிய இறைச்சி ஓடர்கள் செய்யும் போது சகாய விலைக் கழிவுடன் சிறு சிறு துண்டு களாகவும் வெட்டித்தரப்படும்.



☆ புதிய, பழைய சினிமாப் படங்கள் மற்றும் தொடர் நாடகங்கள் எப்பொழுதும் கிடைக்கும்



இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட மளிகைப் பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெறலாம்.

தொலைபேசி அட்டைகள், Audio Video VCD DVD ஆகியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ள கற்பகம் பல்பொருள் அங்காடி.

பங்கு இறைச்சி உட்பட மான் கோழி பன்றி என எல்லா வகையான இறைச்சிகளும் தினசரி கிடைக்கும்

36 Loampit Hill,
Lewisham,London SE13 7SW
Tel: 020 8694 8810



Thinesh Jewellers & Textiles

தினேஷ் ஜுவலர்ஸ்&ரெக்ஸ்ரைல்ஸ்

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்



22ct தங்க வைர நகைகளை கண்கவர் வேலைப் பாடுகளுடன் உங்கள் எண்ணம் போல் செய்து கொள்வதோடு பழைய தங்கத்தில் புத்தம் புதிய நகைகளையும் செய்து கொள்ளலாம்.

தங்கத் திருநாள் 2008
மே 8ம் திகதி வியாழக்கிழமை
நிரந்தர தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்நாளில் தங்க நகைகளை வாங்கி உங்கள் செல்வங்களையும் அதிகூஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள்

276, Lewisham High Street
Lewisham
London SE13 6JZ
Tel: 020 8613 9569



தமிழில் சாரதிகளின் எழுத்துப் பரீட்சை வகுப்புகள்

Theory Test Classes in Lewisham

- Theory Test மற்றும் Hazard Perception Test ஆகியவை இலகுவான முறையில் தமிழில் விளக்கப்பட்டு, கணனிமூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.
- தனி வகுப்புகள், கூட்டுவகுப்புகள் ஒழுங்கு செய்யலாம்.
- பரீட்சைகளுக்கும் ஒழுங்குசெய்து தரப்படும்



தொடர்புகளுக்கு: வேந்தன் 07749051394






SPICE LAND

FOR THE ASIAN TASTE OF SPICE CURRY

குளிரூட்டப்பட்ட ..... மேலதிக இடவசதி கொண்ட ......

100 இடியப்பம் சம்பல் சொதியுடன் £12 பவுண் மட்டுமே

திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், சமூக ஒன்றுகூடல்கள் போன்ற உங்கள் விருந்துபசார தேவைகள் எதுவானாலும் அதற்கு தகுந்தபடி சுவையான, தரமான உணவுகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

7 days a week
Open 11am to midnight

212 LONDON ROAD,
CROYDON,
SURREY CR0 2TE

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்
020 8667 1700
020 8649 8895, 07984 038 757

£15 பவுண்களுக்கு மேல் உணவை வாங்கினால் 3 மைல் எல்லைக்குள் இலவசமாக வினியோகம் செய்யப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடநம்பிக்கை திணிப்புகள் – சிலப்பதிகாரம் முதல் சிவாஜி வரை

ஒரு நாட்டின் இலக்கியத்திற்கும் அதன் சமுதாயநிலை மற்றும் அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. ஒவ்வொரு இலக்கியமும் அது தோன்றிய காலம் மற்றும் மக்களின் நிலை பண்பாடு போன்றவற்றை வெளிப்படுத்துவதாக உள்ளது. சான்றாக சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாடு, வீரம், கொடை, காதல் போன்றவற்றை பிரதிபலிப்பதாக உள்ளது. இலக்கியமானது மனிதன் வாழ்க்கையிலும், மனதிலும், அறிவிலும் பெரும்பாதிப்பினை ஏற்படுத்துகிறது. மகாத்மா காந்தியின் வாழ்வில் அரிச்சந்திரா நாடகம் ஏற்படுத்திய தாக்கத்தை இதற்கு உதாரணமாக கூறலாம். எனவே ஓர் இலக்கியத்தை பார்க்கும் அல்லது படிக்கும் ஒருவருக்கு அது ஒரு பொழுது போக்காக மட்டும் மல்லாமல் அவர்களின் சிந்தனையை மாற்றி அமைக்கும் சக்தியாகவும் இருக்கிறது.

பலநேரங்களில் இலக்கியத்தை படைக்கும் படைப்பாளிகள் சமுதாயத்திற்கு புறம்பான, சமூகம் ஏற்கமறுக்கும் தங்களது கருத்துக்களை, எண்ணங்களை அவர்கள் படைக்கும் இலக்கியத்தில் சமூகம் ஏற்கும் வண்ணம் கதைக்கலம் அமைத்து கதாபாத்திரங்கள் வழியாக தங்களது எண்ணங்களை புகுத்திவிடுகின்றனர். இது திறன் ஆய்வு அடிப்படையில் நோக்கும் போது படைப்பாளி உளவியலின் புறத்தெறிதல் என உளவியல் கூறுகின்றது.

இக்கால இலக்கியங்கள் பெண்ணை போகப்பொருளாகவும், அடிமைகளாகவும் சித்தரிக்கும் இவ்வேளையில் நம் சங்க இலக்கியங்கள் குறிப்பாக புறநானுற்றில் போர்க்களம் புகுந்து தன் மகனை தேடும் வீரப்பெண்ணாய் சித்தரித்துள்ளது காணப் படுகிறது. ஆனால் அவற்றிற்கு பின் நம் தமிழ் சமுதாயத்தின் மீது தொடுக்கப்பட்ட ஆரிய மற்றும் பல்வேறு கலாச்சார படையெடுப்பு களுக்கு பின் தோன்றிய இலக்கியங்களில் குறிப்பாக சிலப்பதிகாரம், இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றில் அவர்களின் சுயநலத்திற்காகவும், வருணாசிரம கொள்கையை புகுத்துவதற்காகவும் அறிவுக்கு புறம்பான பாவம், புண்ணியம், ஜோதிடம், சகுனம், சடங்கு, ஆவி, தெய்வம் போன்ற கதாபாத்திரங்களையும், கருத்துக்களையும் தங்களது இலக்கியத்தில் புகுத்தியுள்ளனர்.

காலம் காலமாக இவ்விலக்கியங்கள் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலை முறைக்கு அறிவு வளரும் முன்னே குழந்தைகளுக்கு கதை, திரைப்படம் போன்றவற்றின் மூலம் பரப்பப்படுகிறது. இக்கருத்துக்கள் குழந்தையாக இருக்கும் பொழுதே நமது நினைவிலியில் பதிவு செய்யப்படுகின்றது. உலக நாடுகள் அனைத்திலும் அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டபோதிலும் மூடநம்பிக்கை மறையாமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

உலகில் தோன்றிய தந்தை பெரியார், டொக்டர்.அம்பேத்கர் போன்ற பகுத்தறி வாளர்களால் மூடநம்பிக்கை ஓரளவு ஒழிக்கப்பட்டு மானுடம் வளர்ச்சிப் பெற்றது. அறிவியல் வளர்ச்சியின் முழுவெற்றியானது அதனை பயன்படுத்தும் முறையை பொறுத்தே அமையும். ஆனால் கொடுமை, இலக்கியங் களை வெளிப்படுத்தும் ஒரு ஊடகமாய் தொலைக்காட்சி மற்றும் திரைப்படம் போன்ற பெரிய அளவில் பயன்படுத்தும் ஊடகங்கள் மக்களின் அறிவினை மழுங்கடிக்கவே பயன்படுத்தப்படுகின்றன.
இன்றைய சமுதாயத்தில் அறிவியல் வளர்ச்சி ஓரளவு ஏற்பட்டிருப்பினும் மூடபழக்கம் எனும் கொடிய நோயிலிருந்து நாம் விடுதலை அடையவில்லை என்றே கூறலாம்.

திரைப்படங்களில் மூடநம்பிக்கை திணிப்புகள் நடைபெறுகின்றன.
சந்திரமுகி என்ற படத்தில் சந்திரமுகி என்ற கற்பனைக் கதாபாத்திரத்தின் கதையை ஆழமாக உள்வாங்கிய ஒருவர் இன்னொரு வராக மாறும் தன்மையாக மாறியதை அறிவியல் ரீதியான உண்மையாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும், சில மூடநம்பிக்கை களையும் கையாண்டு இருக்கிறார் இயக்குநர். இறந்தவரின் ஆன்மா கெட்டலையும் என்ற பகத்தறிவிற்கு முரணான திணிப்புகளைப் புகுத்தி. சோதிட சாஸ்திரத்தையும் நம்பியாக வழிபாட்டில் ஈடுபடும் ஒரு சோதிடக்காரரின் உதவியும் தனக்குத் தேவை என்று உளவியல் நிபுணரும் கூறியிருப்பது கதாசிரியாரின் கற்பனையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அக்கற்பனை வேண்டாத எண்ணங்களை வளர்ப்பதாகவே அமைந்திருக்கிறது. சாமியின் பெயரைச் சொல்லியும். ஆவி, பேய் போன்ற மூடநம்பிக்கைளை வளர்த்து அதனைப் போல தன்னுள் மாற்றங்களை ஏற்படத்தி நம்ப வைக்கின்றனர். தன்னுடைய சுயநலத்திற் காகவும் உடலில் உள்ள கோளாறுகள் காரணமாகவும் பேயாடுவது போன்ற உணர்வு வெளிப்பாடு நிகழ்கிறது. இது அறிவியல் கண்டறிந்த உண்மை. எத்தனை பேருக்குத் தெரியும். இந்த அறிவியல் உண்மை. அறியாமை என்னும் நோயைக் குணப்படுத்தி னாலொழிய மூடநம்பிக்கைகளைக் களைவது கடினம்.

பருத்திவீரன் என்ற படத்தில் கதாநாயகி சில மனித மிருகத்தால் வேட்டையாடப்பட்டு இறக்கும் தருவாயில் கதாநாயகனிடம் அவனுடைய பாவத்திற்கான தண்டணையே தனக்கு இக்கொடுமை நேர்ந்ததாகக் கூறுகிறாள். இந்த இடத்தில்தான் கதாசிரியாரின் மூடநம்பிக்கை வெளிப்படுகிறது. பாவமும் இல்லை, புண்ணியமும் இல்லை. பகுத்தறிவு மட்டுமே உண்மை என்பதைக் கூற மறந்துவிட்டார் இயக்குநர். இது போன்ற இலக்கிய ஊடகத்தினால் மனிதன் தான் செய்த தவறினை மறைத்து அதனை விதியின் மேல் சுமத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. உண்மைக்குப் புறம்பான இது போன்ற இலக்கியத்தில் மாற்றங்களைக் கொணர்ந்து அறிவுக்கான புதுமைகளைக் கொண்டு வர வேண்டும்.


சமீபத்தில் வெளியாகி மிகப்பரப்பரப்பாக திரையரங்குகளில் ஓடவைத்துக் கொண்டிருக்கும் சிவாஜி படத்திலும் மூடநம்பிக்கைகளைக் கையாண்டு இருக்கிறார் இயக்குனர். இதில் கதாநாயகிக்கு ஜாதகம் அதாவது கிரகநிலை சரியில்லை என்றும் எனவே அவளை மணந்து கொள்ளும் நாயகனுக்கு அதனால் பதிப்புகளும் தீமைகளும் ஏற்படும் என்றுகூறி உண்மை யிலேயே அதன் பாதிப்புகள் ஏற்படுவது போலவும் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இயக்குனர் கருப்பு பணத்தை மக்களுக்கு பயனுள்ள வழியில் பயன்படுத்தும் முறையினை தெரிவிப்பதுபோல் படத்தை அமைத்திருந்தாலும் ஆழ்ந்து நோக்கின் தன்னுடைய ஜாதகம் மற்றும் ஜோதிடம் என்னும் மூடநம்பிக்கைகளை புகுத்தும் கதை கலமாகத்தான் இத்திரைப்படத்தை பயன் படுத்தியிருக்கின்றார் என்பதை கவனிக்கலாம்.

இலக்கியத்தைக் கையாளும் இயக்குநர் களுக்கு பெண்களுக்கெதிரான இது போன்ற மூடநம்பிக்கைகள் மூடத்தனம் என்பது புரியவில்லையா. ஜாதகத்தை நம்பி செவ்வாய் தோசம் உள்ள பெண்கள் ஏராளமானோர் இன்றும் திருமண வயது கடந்தும் திருமணமாகாமல் இருக்கிறார்கள். அப்படியே அவர்கள் திருமணம் செய்தாலும் அதே போல் உள்ள ஜாதகரைத் தேடிப் பிடித்து அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அந்தப் பெண் ஏற்றுக் கொள்ளவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படியிருக்க தோசங்களும் கிரகங்களும் வெறும் பொய்யே.

பெண்களுக்கு எதிரான மூடநம்பிக்கை களையும் பழங்கதைகளையும் தோண்டிப் புதைக்க வேண்டும். ஜாதகம் ஏதும் பாராமல் காதல் திருமணம் செய்து கொண்ட அனைவரும் வாழ்க்கையில் தோற்றதுமில்லை. சடங்கும், சம்பிரதாயம் பார்த்து திருமணம் செய்து கொண்ட அனைவரின் வாழ்க்கையும் வெற்றியிருப்பதுமில்லை.
விதியினால்தான் அனைத்து செயல்களும் நடைபெறும் என்று பழமையைச் சொல்லி ஏமாற்றவது விதியுமில்லை ஒன்றுமில்லை. மனிதனின் மதி மட்டுமே உண்மை என்பதை இலக்கியம் சொல்ல வேண்டும் சகுனம்.

## பூந்துணர்

பல எழுத்தாளர்களின் இலக்கியக் கட்டுரைகள் கவிதைகள் என்பனவற்றைத் தாங்கி பூந்துணர் என்னும் நூல் ஒன்று பிரித்தானிய ஈழவர்




இலக்கிய சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அழகிய வண்ண கார்த்திகை மலரை முன்அட்டைப் படமாகக்கொண்டு 210 பக்கங்களைக்கொண்டு வெளிவந்துள்ள இந்நூலில் பேராசிரியர் கோபன் மகாதேவா, “யுகசாரதி” திரு.சி.கருணானந்தராசா, திரு.கதிரித்தம்பி சிவானந்தன், திரு.மீ.ராஜகோபாலன், “நுணாவிலூர்” திரு.க.விசயரத்தினம், திருமதி.சீதாதேவி மகாதேவா, திருமதி.தயா கருணானந்தராசா ஆகிய ஏழு படைப்பாளிகளின் கவிதைகள் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. ஆங்கிலக் கட்டுரைகளும் கவிதைகளும் கூட ஆங்காங்கே உண்டு.

“பூந்துணர்” நூலில் படைப்பாளர்களின் அனுபவத்தில் பிறந்த பல அரிய ஆலோசனை களும் வாழ்க்கைத் தத்துவங்களும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. சமூகம் சார்ந்த தமது பார்வை என்ன என்பதை கவிதைகளாக பலர் வெளிப்படுத்தியுள்ளனர். திருக்குறள், உண்மை, கடமை, பண்பாடு, சமாதானம், ஆண்மை, தமிழீழம், சுனாமி, சங்க கால இலக்கியம் என பலவேறு தலைப்புகளில் கவிதைகள், கட்டுரைகள் நூலில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. வாழ்க்கைக்குத் தேவையான பல பயனள்ள தகவல்கள் தாங்கிய நிறைவான ஒரு நூல்.


வெம்பிளியில் இறைச்சிக் கடை

Best Foods சுப்பர் மாக்கற் உள்ளே

ஆடு, மான், மரை, இறைச்சிகள்

சிறிய சிறிய துண்டுளாக வெட்டித் தரப்படும்



கடைகளுக்கும் கொண்டாட்டங் களுக்கும் ஏற்றவாறு இறைச்சி வெட்டித்தரப்படும்

உடன் இறக்குமதி செய்யப்பட்ட மீன் வகைகள் வெட்டிச் சுத்தம்செய்து தரப்படும்

Best Foods Supermarket
11-13 Ealing road
Wembley
Harrow
HA0 4AA

Tel: 020 8900 0010






வெளிவந்துவிட்டது

2008ம் ஆண்டிக்கான தமிழ் ஓலைகள் வெளிவந்துவிட்டது. உங்கள் இலவசப்பிரதிகளை ஆலயங்கள், தமிழர் வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் தமிழர் நிறுவனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஓவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்கவேண்டிய தகவல் ஏடு. மேலதிக விவரங்களுக்கு

52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF
Tel: 020 8543 2126, 020 8942 8745, Fax: 020 8540 3442
Mobile: 0771 800 3838, 0771 800 3839
email:editor@tamilpages.org. web:www.tamilpages.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடந்தமாத போட்டி முடிவுகள்

## சொற்களைத் தேடுதல் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. சங்கீதா திருச்செல்வநாயகம், ரொட்னம்
2. செல்வி ஜெயராஜா, சவுத்தோல்

**சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு**




க.யோகராஜா, கற்பேர்ட்
ம.அக்சயா, கற்பேர்ட்
அபிதா சத்தியநாதன, எட்ச்வெயர்
சாதனா குலோத்துங்கன், இல்பேர்ட்
மகிநோத் நரசிம்மன், இல்பேர்ட்
அவானிஸ் நரசிம்மன், இல்பேர்ட்
ர.திலக்ஷரி, குறொய்டன்
கௌசிகன் சுகுணவசந்தன், இல்பேர்ட்
ஜெ.ஜெயதர்ஷன், ஈஸ்ட்காம்
ஜனனி விஜயமனோகர், கஸ்ரம் கவுஸ்
கந்தசாமி இலக்கியா, லீ
சர்மிகா லோகேஸ்வரன், மனோர் பார்க்
இராஜலிங்கம் சுஜேந்தினி, கொலின்டேல்
இராசலிங்கம் நிதுர்ஷன், கொலின்டேல்
இராசலிங்ம் தர்ஷன், கொலின்டேல்
மதுஜா புஸ்பராசா, லூசியம்
பி.வரதன், இல்பேர்ட்
அகல்யா ரங்கராயா, கற்பேர்ட்
கோணேஸ்வரன் கவுதமி, லூசியம்
எஸ்.ரி. தேவி, வுட்பேர்ட் கிறீன்
எஸ்.சாம்., வுட்பேர்ட் கிறீன்
சாரங்கன் லோகேஸ்வரன், எட்மன்ரென்
வர்ணன் லோகேஸ்வரன், எட்மன்ரென்
எஸ்.துவாரகை, வுட்பேர்ட் கிறீன்
எஸ்.யசோதரா, வுட்பேர்ட் கிறின்
எஸ்.எம்.மூர்த்தி, சவுத்வுட்பேர்ட்
விஷாலி நீதிராஜா, விம்பிள்டன்
அபிநயா குணபாலன், சட்டன்
அர்ச்சனா சிவசுதன், மனோ பார்க்
பிறிசில்லா முருகதாஸ், நியுபெரி பார்க்
டிலக்ஷனா தயானந்தன், வெஸ்ட் குறொய்டன்
பிரவீணன் மத்தியூ, பிரதாபன் மத்தியூ, குறொய்டன்
மோனிஷா விவேகானந்தராஜா, மிச்சம்
பிரஸ் நடராஜா, கரோ
மாதங்கி திலகரட்ணம், கௌண்சிலோ

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. பிறிசில்லா முருகதாஸ், நியுபெரி பார்க்
2. விக்ஷாலி நீதிராஜா, விம்பிள்டன்

**சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு**



ஷாருங்கினி தங்கராஜா, கரோ
க.யோகராஜா, கற்பேர்ட்
அபிதா சத்தியநாதன், எட்ச்வெயர்
குலோத்துங்கன் கனகலிங்கம், இல்பேர்ட்
சுகிநோத் நரசிம்மன், இல்பேர்ட்
அவானிஸ் நரேந்திரன், இல்பேர்ட்
றஞ்சனா குமாரசாமி, தோண்ரன்கீத்
கு.அஷோக்குமார், கென்ரன்
இராஜலிங்கம் சுயேந்தினி, கொலின்டேல்
இராசலிங்கம் நிதுர்ஷன், கொலின்டேல்
இராசலிங்ம் தர்ஷன், கொலின்டேல்
எஸ்.எம்.மூர்த்தி, சவுத்வுட்பேர்ட்
அபிநயா குணபாலன், சட்டன்
பிரவீணன் மத்தியூ, பிரதாபன் மத்தியூ, குறொய்டன்
திலகவதி குமாரசாமி, தோண்ரன்கீத்
சாரங்கன் லோகேஸ்வரன், எட்மன்ரென்
வர்ணன் லோகேஸ்வரன், எட்மன்ரென்

# ஒன்றுகூடல் மண்டப திறப்பு வைபவம்



சமூக ஒன்றுகூடல் மண்டபம் ஒன்று சென்ற சித்திரை மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறொய்டன் நகரசபை உறுப்பினர் மைக் செல்லா அவர்களினால் வெஸ்ற் குறொய்டனில் 2-ஏ, எல்ம் றோட் என்னுமிடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் நூறு பேர்வரை கொள்ளக்கூடிய தனியார் முயற்சியில் எழுந்த இம் மண்டபம், சிறு ஒன்றுகூடல்கள், கூட்டங்கள், நூல் வெளியீடு, பயிற்சி வகுப்புகள் மற்றும் சிறு கொண்டாட்டங்கள் போன்றவற்றுக்கு பொருத்தமானதாகும்.

# இலங்கைத் தமிழர் பிரதேசங்களில் உணவு நெருக்கடி: ஐ.நா. அமைப்பு எச்சரிக்கை

இலங்கைத் தமிழர் பிரதேசங்களில் உணவு நெருக்கடி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைக்கும் அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அலுவலகம் வெளியிட்டிருக்கும் ஆய்வின் தமிழ்ப் பகுதி: நெல் விளைச்சலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, உலகச்சந்தையில் உணவுப் பொருட்களுக்கான விலை உயர்வு ஆகியவற்றால் இலங்கையில் உணவுத் தட்டுப்பாட்டினை அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகளின் உணவுத்துறை வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

20 மில்லியன் மக்களில் அரைவாசிப் பேர் மாத்திரமே குறைந்தபட்ச கலோரிகளான 2,030 கலோரிகளை தமது நாளாந்த உணவு வேளைகளின் போது பெற்றுக்கொள்கின்றனர் என்று சிறிலங்கா அரசாங்கத்தினால் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு களின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த சராசரி வறிய நபர் ஒருவர் 1,696 கலோரிகளை உணவு வேளையின் போது பெற்றுக்கொள்ளும் அதேவேளை, வறிய மக்கள் அல்லாதோர் 2,194 கலோரிகளை பெற்றுக்கொள்கின்றனர் என புள்ளி விபரத் திணைக்களம் 2008 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமப்புறங்கள் மற்றும் வடக்கு - கிழக்கில் குறிப்பாக 25 ஆண்டுகளாக நிலவிவரும் போ?ச் சூழ்நிலைகளின் காரணமாக குறை போசாக்கு நிலவுவதாக உலக உணவுத் திட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு வெப்ப வலயங்கள் முதல் மத்திய மலைநாடு வரை இந்த குறை போசாக்கு நிலைமை காணப்படுவதாக உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக் கிளை துணைத் தலைவர் ஜேன் யுவெஸ் லெக்கும் தெரிவித்துள்ளார்.

இவை இலங்கையின் மிக வறிய பிரதேசங் களாக கருதப்படுகின்றது. இந்தப் பிரதேசங் களில் மிக உச்ச அளவிலான குறை போசாக்கு, பின்தங்கிய கல்வி நிலை மற்றும் பின்தங்கிய சுகாதார வசதிகள் காணப் படுகின்றன என அவர் குறிப்பிட்டார்.

பின்தங்கிய பிரதேசங்களில் வறுமை மற்றும் அதிக சக்தி தேவைப்பாடு என்பன பிரதான அம்சங்களாக காணப்படுகின்றன. குறிப்பாக விவசாய பிரதேசங்களே பொதுவாக பின்தங்கிய பிரதேசங்களாக கருதப்படுகின்றது. இந்தப் பிரதேச மக்கள் அநேகமாக கடும் உடல் உழைப்பாளிகளாக காணப்படுவதனால் அதிக சக்தி (கலோரிப் பெறுமானம்) தேவைப்படுகிறது என யுனிசெ∴ப் நிறுவனத்தின் முதன்மை தொடர்பாளர் கோர்டன் வேய்ஸ் தெரிவித்தார்.

இலங்கையின் வருடாந்த தனிநபர் உள்நாட்டு உற்பத்திக்கு (1,599 அமெரிக்க டொலர்) ஒப்பீட்டளவில் மிகக் குறைந்தளவு விகிதாசாரத்தில் இலங்கையில் பிறக்கும் குழந்தைகளின் எடை காணப்படுவதாக ஜேன் யுவெஸ் லெக்கும் குறிப்பிட்டார்.

எனினும், இலங்கையின் சிசு மரண வீதத்துடன் ஒப்பீடு செய்யும் போது மூன்று மடங்கு அதிகமாக சராசரி குழந்தைகளின் எடையைக் காட்டுகின்றது என அவர் தெரிவித்தார்.

14 விழுக்காடு 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் குறைந்த எடையைக்கான நோய் குறிகளைக் காட்டுவதாகவும்,

29 விழுக்காடு 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வயதுக்கேற்ற எடையுடன் காணப்படவில்லை யுனிசெ∴ப் தெரிவிக்கின்றது.

மேலும், இனப்பிரச்சினையினால் பாதிக்கப் பட்ட பிரதேசங்களில் இந்த நிலைமை இன்னும் மோசமான நிலையில் காணப் படுவதாக யுனிசெ∴ப் சுட்டிக்காட்டுகின்றது.

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போரின் காரணமாக உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு நிலை தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டியேற்பட்டுள்ளதாக யுனிசெப் தெரிவிக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உணவுப் பாதுகாப்பின்மை மிக முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளில் உள்ள மக்கள் கடுமையான உணவு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக உலக உணவுத் திட்டத்தினால் மேற்கொளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் மனித உரிமை உதவிகள் தேவைப்படுவதாகவும் ஆய்வு முடிவுகளின் மூலம் தெரியவருகிறது.

இலங்கையில் பணவீக்க அளவு முன்னொரு போதும் இல்லாத வகையில் உயர்வடைந்து செல்வதனால் தேசிய போசாக்கு மட்டம் மேலும் வீழ்ச்சியடைக்கூடும் என உலக உணவுத் திட்ட அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கிரமமற்ற முறையில் பருவ காலங்களில் பெய்த கடும் மழையினால் பெரும்போக நெற்செய்கை மிக மோசமாக பாதிக்கப்பட்டது. மேலும் உலக சந்தையின் விலையேற்றம் மற்றும் உணவுப் பொருட்களுக்கான விலை அதிகரிப்பு என்பவற்றின் காரணமாக இலங்கை எதிர்காலத்தில் பாரிய உணவு நெருக்கடியை எதிர்நோக்கக்கூடும் என உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக் கிளை துணைத் தலைவர் ஜேன் யுவெஸ் லெக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதட்டம் – பதற்றம் எது சரி?

**கலைஞர் விளக்கம்**

அண்மையில் திமுக பிரமுகரின் இல்லத் திருமணத்தில் கலந்துகொண்டு பேசுகையில்



கலைஞர் கருணாநிதி கூறியது:-

நான் பல நேரங்களில் பத்திரிகை யாளர்களுக்கும், நண்பர்களுக்கும் குறிப்பாக எடுத்துச் சொல்லி வருகிறேன். ஆனால் யாரும் அதைக் காதிலே போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. பத்திரிகை களில் ஒரு ஊரில் நடைபெறுகின்ற ஒரு சிறு கலவரம் - பாம்பு புகுந்தது - புலி வந்தது- என்ற இந்தச் செய்திகளைப் பத்திரிகைகளிலே போடும்போது,

அதனால் அந்த ஊர் மக்கள் அனைவரும் 'பதட்டம்' அடைந்தார்கள் என்று போடுகிறார்கள். நான் சொல்வேன்- 'பதட்டம்' அல்ல, 'பதற்றம்' என்று போட வேண்டும். 'பதட்டம்'' என்று போட்டால் அது தவறு, தமிழ் அல்ல என்று சொல்லியிருக்கிறேன். அப்படியா? என்று கேட்டுக் கொண்டு பத்திரிகையாளர்கள் மீண்டும் மீண்டும் பதட்டமாகவே இருக்கிறார்கள், அதாவது பதட்டம் என்றே போட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

அதைப் போல 'அருகில்' என்றால் அதற்கொரு பொருள், 'மிகவும் கிட்டே' என்று பொருள். இந்த ஒலிபெருக்கிக்கு அருகில் என்றால், இந்த ஒலிபெருக்கிக்குப் பக்கத்தில் என்று அர்த்தம். சில பேர் அருகில் என்றால் பக்கத்தில், 'அருகாமையில்' என்றால் இன்னும் பக்கத்தில் என்று எண்ணிக் கொண்டு 'அருகாமையில்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள்.

'அருகாமையில்' என்றால் 'தூரத்தில்' என்று தான் பொருள். கலைஞரும், பாலுவும் அருகாமையில் அமர்ந்திருந்தார்கள் என்றால், உண்மையான தமிழைப் படித்தோர்க்கு என்ன தோன்றும் என்றால் இரண்டு பேருக்கும் கொஞ்சம் விரோதம் போலும், அதனால் பாலு அருகாமையில் அமர்ந்திருக்கிறார், பக்கத்திலே அமரவில்லை என்று எண்ணிக் கொள்வார்கள்.

'அருகாமையில்' என்றால் 'தூரத்தில்' என்று பொருள். 'அருகில்'' என்றால்தான் 'பக்கத்தில்' என்று பொருள். இதை நான் எத்தனையோ முறை சொல்லியும் கூட, பத்திரிகையாளர்கள் இவர் என்ன ரொம்ப தமிழ் படித்தவர், நம்மை விடவா? என்கின்ற அந்த எண்ணத்தோடு இன்னமும் 'அருகாமையில்' என்பதைத் தான் பக்கத்தில் என்பதற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளை வளர்ச்சிக்கு விற்றமின்–டி அவசியம்

விற்றமின்-டி சத்து உடலில் கால்சிய அளவை ஒரு சீராக இருக்க உதவுவதன் மூலம் ஆரோக்கியமான எலும்புகம் உருவாக இது துணை புரிகிறது. அது மட்டும் அல்லாமல், மேலும் ஒரு முக்கியமான பணியையும் இது செய்து வருகிறது. மூளை வளர்ச்சிக்கு இது பெரும் உதவியாக இருக்கிறது.

விற்றமின்-டி சத்து மீன், பால் போன்ற சில உணவுப்பொரும்களில் மட்டும் தான் காணப்படுகிறது. சூரிய ஒளியில் கிடைக்கும் அல்ட்ரா வயலட் கதிர்கள் உடல் தோலில் உள்ள உயிரி ரசாயனப்பொருளை விற்றமின்-டி யாக மாற்றுகிறது. வெள்ளைத்தோல் உடையவர்களை விட கறுப்பு தோல் உடையவர்களுக்கு தான் அதிக அளவில் வைட்டமின் டி சத்து அல்ட்ரா வயலட் கதிர்கள் மூலம் கிடைக்கின்றன.

இந்த உண்மைகளை ஆக்லாந்து ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த டாக்டர்கள் ஜாய்ஸ் சி மெக்கன், புருஸ் என்.அமெஸ் ஆகியோர் ஆராய்ச்சி மூலம் கண்டறிந்து இருக்கிறார்கள்.

## 9,550 ஆண்டுகளாக வளரும் உலகிலேயே வயதான மரம் சுவீடன் நாட்டில் உள்ளது.

உலகிலேயே மிகவும் வயதான மரம் சுவீடன் நாட்டில் தலர்னா மாகாணத்தில் உள்ள மலைப்பகுதியில் உள்ளது. இது ஒரு வகையான ஊசி இலை மரம் ஆகும். இந்த மரத்தை ஆய்வு செய்த லீப் குல்மன் என்ற பூகோளவியல் பேராசிரியர், இந்த மரத்தின் வயது 9,550 ஆண்டுகள் இருக்கும் என்றும், உலகத்திலேயே இதுதான் மிகவும் வயதான மரம் என்றும் கூறினார். மலைப்பகுதியில் பாறை மற்றும் புதர்களுக்கு இடையே பல்லாயிரம் ஆண்டுகளாக மாறுபட்ட தட்ப வெட்ப நிலையை தாங்கியபடி இந்த மரம் கம்பீரமாக வளர்ந்து நிற்கிறது.

இதுவரை, தென் அமெரிக்காவில் உள்ள 4 ஆயிரம் முதல் 5 ஆண்டுகம் வயதுள்ள பைன் மரங்கள் தான் உலகிலேயே வயதான மரங்களாக கருதப்பட்டு வந்தன.

## செவ்வாய் கிரகம் செல்ல குரங்குகளுக்கு பயிற்சி!!

செவ்வாய் கிரகத்திற்கு குரங்குகளை அனுப்பி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் செவ்வாய் கிரகத்திற்கு செல்லும் முதல் விலங்கு என்ற பெருமை குரங்குகளுக்குக் கிடைக்கவுள்ளது.

செவ்வாய் கிரக பயணத்திற்கு தயார் செய்வதற்காக ரசியாவின் கருங்கடல் அருகே உள்ள வெஸ்யோலோயே என்ற இடத்தில் உள்ள சோச்சி மருத்துவ கழகத்தில் 40 குரங்குகள் வளர்க்கப்பட்டு, பயிற்று விக்கப்பட்டு வருகின்றன.

மனிதர்களை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்புவதற்கு முன்னோட்டமாக இந்த குரங்குகளை அங்கு அனுப்பி வைக்க வுள்ளனர். இதுகுறித்து மருத்துவக் கழகத்தின் இயக்குநர் போரிஸ் லேபின் கூறுகையில், மனிதர்களுக்கும், குரங்குகளுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. எனவே நாய்கள் அல்லது பிற விலங்குகளை வைத்து பரிசோதனை நடத்துவதை விட குரங்குகளை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

செவ்வாய் கிரகத்திற்கு சென்றால் அங்கு கதிர்வீச்சை சந்திக்க நேரிடும். அதை மனிதர்களால் சமாளிக்க முடியுமா என்பதை அறியவே குரங்குகளை அனுப்பி சோதனை செய்யவுள்ளோம்.

இந்த குரங்குகளுக்கு கதிர்வீச்சு சோதனை, சிறப்பு உணவு, தனிமை, எடைக்குறைவு உள்ளிட்ட பல சோதனைகள் மேற்கொள்ளப் படும் என்றார் போரிஸ்.

1983ம் ஆண்டு முதல் முறையாக விண்வெளிக்கு குரங்குகளை அனுப்பியது ரசியா. அதன் பின்னர் 1996ம் ஆண்டுடன் விலங்குகளை அனுப்பும் சோதனையை நிறுத்தியது ரசியா. காரணம், நிதிப் பிரச்சினை.

இந்த நிலையில் செவ்வாய்க்கு குரங்குகளை அனுப்ப திட்டமிட்டுள்ளது ரஷ்யா. இருப்பினும் குரங்குகள் செவ்வாய்க்கு செல்ல குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆகும் என்று தெரிகிறது.

## இந்திய அர்ச்சகர்களுக்கு விசா அனுமதி நீடிக்க மலேசியா முடிவு

இந்தியாவில் இருந்து வந்துள்ள கோயில் அர்ச்சகர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், சிற்பிகள் ஆகியோருக்கு விசா அனுமதி நீடிக்கப்படும் என்று மலேசிய அரசு அறிவித்துள்ளது. சிறுபான்மையினராக உள்ள இந்தியர்களை, மலேசிய அரசு புறக்கணிப்பதாக அங்குள்ள இந்தியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்தியாவில் இருந்து சென்ற கோயில் அர்ச்சகர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள் மற்றும் சிற்பிகள் அங்கு தங்கியிருக்க விசா அனுமதியை மேலும் நீடிக்க முடியாது என்று சில மாதங்களுக்கு முன்பு மலேசிய அரசு கூறியது.

தற்போது அந்த முடிவை மாற்றிக் கொண்டிருக்கிறது மலேசிய அரசு. அங்குள்ள இந்தியர்களின் நல்லெண்ணத்தைப் பெறும் நோக்கில் மலேசிய அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.






## பிரித்தானியாவில் முதன் முறையாக தமிழர் மெய்வல்லுநர் போட்டி

பிரித்தானியாவில் முதன் முறையாக அனைத்துப் பாகங்களையும் உள்ளடக்கிய பிரித்தானிய "தமிழர் மெய்வல்லுநர் போட்டி




- 2008" கடந்த சித்திரை மாதம் 13ம் திகதி இலண்டன் வடகிழக்கில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற Lee Valley Athletic centrey இல் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஐந்து இல்லங்களைச் சேர்ந்த ஆண்- பெண் இரு பாலாருக்குமான அணிநடையோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பிரித்தானியக் கொடியினை எட்மன்ரன் உதவி நகரபிதா லீ சேம்பலினும் பிரித்தானிய தமிழர் விளையாட்டுச் சபையின் கொடியினை அதன் தலைவர் அன்சல்மாரும் ஐந்து இல்லங் களுக்கான கொடிகளை இல்லங்களின் முகாமையாளர்களும் ஏற்றி வைத்தனர்.

நூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளை உள்ளடக்கிய தடகள விளையாட்டுக்கள் பிரமாண்டமான உள்ளக-வெளியக விளையாட்டுத்திடலில் ஆரம்ப மாகின.

நிகழ்வு இரவு 7:00 மணிவரை நடைபெற்றது. இறுதி நிகழ்வாக பரிசளிப்பும் நடைபெற வுள்ளது.

## கருணாரட்ணம் அடிகளாரை நினைவுகூர்ந்து இலண்டனில் திருப்பலிப்பூசை

வவுனிக்குளத்தில் இடம்பெற்ற கிளை மோர் தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ். மறைமாவட்ட குருவாகிய அருட்திரு. எம்.



எக்ஸ்.கருணாரட்ணத்தினம் அடிகளாரை நினைவுகூர்ந்து சென்ற மாதம் 27ம் திகதி இலண்டன் பொரஸ் ட்கேற் புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலிப் பூசை ஒன்று ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பிரித்தானிய தமிழ் கத்தோலிக்கபீட குரு அருட்திரு யூயின் அடிகளார் அன்னாரின் இரங்கல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். ஆலயத்தில் கருணாரட்ணம் அடிகளாரின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு மக்கள் அவருக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். திரு.சூ.யோ.பற்றிமாகரன், திரு டேவிட் ராஜ் பரராஜசிங்கம் ஆகியோர் கருணாரட்ணம் அடிகளார் ஆற்றிய சேவை பற்றி எடுத்துக்கூறினார்கள். திருப்பலியின் முடிவில் ஆலய மண்டபத்தில் ஒன்றுகூடலும் நடைபெற்றது.

## வன்னிப் பகுதி... (11ம் பக்க தொடர்ச்சி)

செஞ்சிலுவைக் குழுவின் விமான சேவைகள் நோயாளிகளுக்கு குறிப்பாகக் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு பேருதவியாக இருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர் ஒருவர் தெரிவிக்கின்றார். யாழ்ப்பாணத்திலிருந்து வேறு பகுதிகளுக்கு மருத்துவ பயிற்சிக்காகச் செல்லும் மருத்துவர்களும் இந்த விமான சேவை யைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆபரணக் காட்சியகமும், ஆரவாரமும்

ஆண்டுக்கு ஆண்டு இடம்பெறும் பாசல் நகரின் ஆபரணக் கடிகாரக் கண்காட்சி பாசல் நகரை இரண்டுபட வைத்திருக்கின்றது. Basel World என்று உலக நாடுகளால் அறியப்படும் இந்தக் கண்காட்சியில், 45 நாடுகளிலிருந்து வந்துள்ள 2,109 கண்காட்சியாளர்கள் தமது நவீன உற்பத்திகளை, இந்தக் கண்காட்சியில் பார்வைக்கு விட்டுள்ளார்கள். 3ம்-திகதி ஆரம்பித்த இக் கண்காட்சி 10ம் திகதி முடிவடைகின்றது. 355 வேறுபட்ட ரகக் கடிகாரங்களும், 544 வேறுபட்ட ஆபரணங் களும், இங்கு பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன. இங்கு வருகைதருவோர் தொகை 100,000ஐ தாண்டலாம் என்று கருது கின்றார்கள். ஏறத்தாழ 2,500 பத்திரிகை யாளர்கள் வருகை தந்துள்ளார்கள். நகரமெங்கும் விற்பனை சூடுபிடித்திருப் பதுடன், வாகன நெரிசலும் அதிகமாகி உள்ளது. எல்லைப்புறச் சோதனைகளிலும் கெடுபிடிகளை அதிகமாக்கி இருக்கின்றார் கள்.1917ம் ஆண்டு முதற் தடவையாக, இக் கண்காட்சி இடம்பெற்றது. கடந்த ஆண்டு 100 நாடுகளிலிருந்து 101,7000 பார்வையாளர்கள் இக் கண்காட்சியை நேரில் காண விஜயம் செய்திருந்தார்கள்.


அன்புடன் அழைக்கிறோம்
ராகினி ராஜகோபாலின்
Academy of Tamil Arts
நாட்டியாலயா 30வது ஆண்டு விழா

19.07.2008 சனி மாலை
சதங்கையின் நாதத்தில்
பரத சங்கமம்
1800 பேர் கூடும் பிரமாண்ட அரங்கில்....



CONCERT HALL
Fairfield Halls,
Park Lane, Croydon
Surrey CR9 1DG
Tel: 020 8767 8004
Mob: 07904 069 369


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SKY WINGS LTD
## TRAVEL AGENTS WORLWIDE


24 hour Ticketing


ROYAL JORDANIAN

◆ HOT DEALS
Srilankan Specials

◆ South India Specials
Holiday Packages
Special Fares

◆ Far East Specials
Holiday Packages
Special Fares

◆ Holiday Packages
Special Fares

ATOL 5766

◆ Europe Specials
◆ Caribbean Specials

119 Tooting High Street
London SW17 0SY

IATA

**Tel: 020 8672 9111**



# USHANI Caterers

◈ உஷானி கேற்ரறஸ் உணவுகள் சுத்தம் - சுவை - தரம் மிகுந்தவை.

◈ அனைத்துலக சுகாதார தரத்தில் தயார்செய்யப்படுகின்றன

◈ நேர்த்தியான முறையில் சுடச்சுட உணவுகள் பரிமாறும் முறைகள் கையாளப்படுகின்றன.

◈ திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டம், பூப்புநீராட்டுவிழா, கூட்டங்கள், மாநாடுகள் எதுவானாலும் அதற்குரியமுறையில் செய்து வழங்கப்படும்/ பரிமாறப்படும்

◈ போட்டே, வீடியோ, மண்டப அலங்கார வசதிகளும் உண்டு

◈ ஒவ்வொரு ஓடர்களுடனும் Free Surprise Dish வழங்கப்படுகிறது



**0800 195 9975**

Noon House, 34 Steele Road, Park Royal
London NW10 7AS
Mobile: 07867 911 591, Tel: 020 8838 4757



# BIRAVENAAS
**South Indian & Sri Lankan Restaurant and Bar**

**Open Daily**
**Monday –Thursday**
**12.pm to 11.30pm**
**Friday to Sunday**
**12pm -01am**



FREE DELIVERY*

**Lunch Buffet £5.95**
**12.30 – 3.30**

1, Sandhurst Market Sandhurst Road
Catford, London SE6 1DL

**Tel: 020 8695 8625**

*Orders over £12 with in 3 miles 6-10pm



# EELAM SHOP
## ஈழம் கடை

இலங்கை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், கடலுணவு வகைகள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்ற அனைத்துப் பொருட் களையும் மனநிறைவுடன் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம் ஈழம் கடை



399 Lewisham High Street
London SE13 6NZ
Tel: 020 8690 6545



# JK Gold & Fashion House

**சிறப்பு வைபவங்களை குதூகலமாக கொண்டாடி மகிழ உங்களுக்காக வரவழைக்கப்பட்ட குந்தன் வேலைப்பாடு கொண்ட Sequence, முத்து Designer சாறிகள் மற்றும் பரதநாட்டிய, பூப்புனித நீராட்டு விழாவிற்குத் தேவையான நகைகள் (அரக்கு) மலிவு விலையில் கிடைக்கும்**

கோயிலுக்குத் தேவையான சகல பூசை சாமான்களும் எங்களிடம் கிடைக்கும்



**JK Gold House & Fashion House**
**314-316 London Road**
**Croydon CRO 2TJ**
**Tel: 020 8684 4577**
**Fax: 020 8684 4677**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org